விலை 2 அணா

# திராவிடநாடு

# யோகம்

—ப்ஷநி—

**சுதர்சனர்:-** நேருவோட புகழ் பார்த்திரா ஜெகமெங்கும் பரவியிருக்கு—யோக ஜாதகம், ஓய்! இருந்தா, அப்படி இருக்க வேணும்......!

**ராமானுஜம்:-** ஆமாம்...........ராஜ யோகம்னு இப்படிப்பட்ட ஜாதகத்தைத்தான் சொல்றது......ஆனாலும் ஒரு விஷயம் கவனிச்சீரா, லோகமே புகழட்டும், பல தேசங்களிலுள்ள மன்னாதி மன்னர்களெல்லாம் அவருக்கு மங்களார்த்தி எடுக்கட்டும், அதெல்லாம் ஒரு பிரமாதம்னு சொல்ல முடியாது... அப்படிப்பட்ட லோகப் பிரசித்திபெற்ற நேருவை, நம்ம கிருஷ்ணமாச்சாரி, அதட்டி தம் வழிக்கு வரச் செய்திருக்கார் பாரும், அதைப் பார்க்கும் போதுதான், நேக்கு, இந்த நேருவோட ஜாதகத்தைவிட, நம்ம, டி. டி. கே. ஜாதகம் சிலாக்கியமானதுன்னு தோண்றது. என்ன சொல்றீர்!"

**சுதர்:-** சொல்ல என்ன இருக்கு ஓய்! டி. டி. கே. யோட ஜாதகம், நிச்சயமா, நேருவோட ஜாதகத்தைவிடப் பிரமாதம் தான், சந்தேக மென்ன......

**ரா:-** இதோபாரப்பா ஜவஹர், இந்த தேசத்துக்கே நீ, முடிசூடா மன்னன், அதை யாரும் இல்லேன்னு சொல்ல முடியாது ஆனா, நான் ஒரு தினுசான பேர்வழி, என் இஷ்டத்துக்கு விரோதமா யார் நடந்துண்டாலும், அவா லோகமே போற்றிக் கொண்டாடத் தக்க புருஷோத்தமனாக இருந்தாலும், நேக்கு, அவாளுக்குத் துதிபாடிண்டு, தாசனா இருந்திண்டிருக்க முடியாது, அதனாலே என் மந்திரி வேலையை ராஜிநாமாச் செய்துடறேன், நீ வேறு ஆளைப் பார்த்துக்கோன்னு, சொல்லிவிட்டு, மூட்டை முடிச்சி, பெட்டி படுக்கை எல்லாம் தூக்கிண்டு, டில்லியிலே இருந்து கிளம்பிவிட்டார், டி. டி. கே. சகல தேசத்துத் தலைவாளும், நேருவைக் கண்டா நடுங்கறான்னு சொல்றா, அப்படிப்பட்ட நேரு, நடுநடுங்கிப் போய், டி. டி. கே,யை அழைச்சி, என்ன கஷ்டம்? என்ன தவறு நடந்துவிட்டது? ஏன் இப்படி ராஜிநாமாச் செய்யணும்?னு கேட்டு, டி. டி. கே,யோட இஷ்டத்தைப் பூர்த்திசெய்து, புதுசா சில இலாக்காக்களையும் ஏற்படுத்தி டி. டி. கேயிடம் கொடுத்தார். இதல்லவா சரியான ராஜ யோகம்!!"

**சுதர்:-** ஆமாம்! நேருவோட ஜாதகத்திலே, ஏதோ இப்பத்தான், சுக்கிரதிசைபோல இருக்கு, பட்டம், பதவி, வரவேற்பு வைபவம், இதெல்லாம் கிடைக்கறது. ஆரம்பத்திலே எவ்வளவு அல்லல்! என்னென்ன கஷ்டம்! சிறைவாசம்! வனவாசம்! நம்ம, டி. டி. கேயோட ஜாதகத்தைப் பாருமே, இப்படிப்பட்ட 'சனிதிசை' துளியும் கிடையாது! ஆரம்ப முதல், ஆனந்தம் தான். ஜாதகம் அப்படி இருக்க வேணும் ஓய்!

**ரா:-** சந்தேகமென்ன! பெயர் என்ன? கிருஷ்ணன்! எப்படிப்பட்ட ஜாதகம் என்பது, கிருஷ்ணாவதாரத்தைக் கவனிச்சாலே தெரியறதே! ஸ்ரீராமச்சந்திரனோட ஜாதகம், பதினாண்காண்டு வனவாசம், சீதாபஹரணம், கடைசி வரையிலே கஷ்டம், கஷ்டம், கஷ்டம்னு இருந்தது! கிருஷ்ண பரமாத்மாவோட ஜாதகம், 'ஜம்னு' அமைஞ்சிருந்தது பாரும்! சதா புல்லாங்குழலை ஊதிண்டு போக போக்கியத்தை அனுபவிச்சிண்டு, கோபிகாஸ்திரி ரத்னங்களோடே கோலாட்டமாடிண்டு, ராதா—ருக்மணி சமேதராக, பிருந்தாவன லீலா விநோதனாக இருந்தவரன்னோ! அப்பேற்பட்ட பரமாத்மாவோட பேரன்னா இருக்கு, டி. டி. கே,ய்க்கு.

**சுதர்:-** பேஷாச் சொன்னீர் ஓய்! ஆமாம்! நேக்கு ஒரு சந்தேகம்! ஜெயிலுக்குப் போறது, சத்யாக்கிரகம், வரிகொடா இயக்கம், மறியல், தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் இப்படிப்பட்ட தொல்லைகளெல்லாம் இருந்த போது நம்மோடு சேராமல் பிரிட்டிஷ் கம்பெனிச் சீமான்களோட சகவாசத்தை வைச்சுண்டு, சுகவாசியா இருந்தவராச்சே இந்த டி. டி. கே.; இவர் இப்பகாங்கிரஸ்மந்திரியா இருக்க அனுமதிக்கலாமா—நமது கௌரவம் பாழாக வில்லையா, அப்படி இப்படின்னு, காங்கரஸ்காராளுக்கு, எங்கே கோபம் வந்துடறதோன்னு பார்த்தேன், துளிக்கூடக் காணோமே, அது ஏன் ஓய்!"

**ரா:-** அதைத்தான் ஓய்! முகபாக்

(13-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14 ] 17—7—55 [ இதழ் 2

# ஜூலை

—o—

தியாகப் பாதையிலே சிம்ம நடை போடும் சிறப்புமிக்க தோழர்காள்! இரண்டாம் ஆண்டு முடிவடைகிறது, ஜூலை 15, வேட்டுச்சப்தம் கேட்டு! நாட்டு நல்லறிவாளர்களாகிய நமது தோழர்களில் பலர், 'சிறைக்குள் சென்றுகொண்டேயிருந்தனர் அன்று! திரும்பிய இடமெல்லாம், ஒழிக வடவர் ஆதிக்கம்! அழிப்போம் ஆணவக்குரலை! திராவிடநாடு திராவிடருக்கே!! என்ற வீரக்குரல் முழங்கக் கேட்டோம். நாடும், ஏடுகளும், நம்மவரின் தியாகத்தையும் திராவிட இன வாலிபர்களின் இதயக் குமுறலையும் ஒரே நாளில் உணர்ந்துகொள்ளச் செய்தது ஜூலை 15. கண்மணிகள் அறுவர்; கல்லக்குடி நடராசன், திருச்சி கேசவன், தூத்துக்குடி உச்சிமாகாளி, கணபதி, சீனிவாசம் பிள்ளை, மந்திரம் நாடார், இந்த மண்ணிலிருந்தே பிரிக்கப்பட்டனர் குண்டுமாரியால். மணப்பாறை தோழன் குமரவேல், காங்கிரசாட்சி வழங்கிய ஆறுமாதக் கடுங்காவலின் பயனுக, சிறையிலிருந்து மீண்டதும் பிணமானுன்; நம்விழிகள் குளமாயின! 5000க்கு மேற்பட்ட வீரர்கள், வெஞ்சிறையில்—நூற்றுக்கு மேலானோர், கரமிழந்தும், காலிழந்தும். காணுத காட்சி! கேட்டிராத கோரம்!! எனினும், சிறிதுகூட பலாத்காரம் இல்லாது, நெஞ்சில் கொண்ட கொள்கைக்காகப் பலியாகிக் காட்டினர், நமது பைந்தமிழ்த்தோழர்கள். ஆண்டுஇரண்டாகிவிட்டது, மும்முனைப் போர்—எனும், சரிதச் சொல்லை, கழகம் ஏந்திக்கொண்டு. ஜாலியன் வாலாபாக்!—வெள்ளையன் வெறியை, உலகுக்கு வெளிப்படுத்தும் கொடுமைக் களம் என்று கூறுவர், காங்கிரசார்—ஆனுல், அதே தியாகிகளாட்சியில், கல்லக்குடி! தூத்துக்குடி! எனும் இரண்டு கோரக் களங்களை, உண்டாக்கித் தந்தனர். தடியடி! கண்ணீர்ப் புகை!!—எல்லாம் எடுத்து வீசப்பட்டது. டெலிபோனில் உத்தரவு! கண்ணசைவுமூலம்கட்டளை! 'ஒழித்துக் கட்டிவிடுவேன்' என்று பேசுவதன் மூலம் ஒரு ஜாடை!-இப்படி, எத்தனை யெத்தனையோ முறைகளை எடுத்து வீசினுர், ஆச்சாரியார். அந்தோ, பாபம், ஆண்டு இரண்டாகிறது! சென்னைக் கோட்டையிலே, அவர், இல்லை; ஆனுல் அன்றுபோல இன்றும், மக்கள் மன்றத்திலே நாமிருக்கிறோம்—அவர், ஆட்சிபீடத்தைவிட்டு இறங்கிவிட்டார்! ஆனுல், அவர் ஏற்படுத்தித்தந்த 'தியாக முத்திரை' இருக்கிறது, நம் இதயத்தில்! ஜாலியன் வாலாபாக் நடத்திய டயர், இல்லை, உலகில்; ஆனுல், நிகழ்ச்சி, உலக விடுதலை இயக்கம் உள்ளளவும் நீடிக்கும்; அதுபோல, திராவிடம் வாழுமளவும், ஜூலை 15, சரிதத்தில் வாழும்.

ஜூலை **15**—நமது, உள்ள உரத்தையும், எடுத்ததை முடிக்கும் ஆற்றலையும் காட்டும் நாள்.

ஜூலை **15**—மாற்றுர்; 'உற்றுர் என' சந்தர்ப்பம் நேரும்போது உறவாட அழைப்போர்; அனைவரும் நம்மை எப்படிக் கருதினர் என்பதை எடுத்துக் காட்டிய நாள்.

ஜூலை **15**—திராவிட முன்னேற்றக் கழகம், தீரர்கள் கோட்டம்! வீரநடை போடும், விடுதலைப்புரிப் பட்டாளம்!—என்பதை, அகில உலகுக்கும் எடுத்துக் காட்டிய, இலட்சிய தினம்.

சிறு பொறி, பெருநெருப்பாகாது!—என்று ஆச்சாரியார் கருதியதாலேயே, இன்று அரசபீடத்தில் இல்லை. அதே குணம், அரசபீடத்துக்குத் தொத்துநோய் போலும்!—எனும் அறிகுறியே, காமராஜரிடமும் காண்கிறோம். நோய்தீர்க்கும் மருந்தை வைத்திருக்கும் அறிவியக்கம் அரசியல் பிடிவாதத்துக்குதக்க வைத்தியம் செய்யத் தயங்காது! ஏனென்றுல், அதன் வசம், மற்ற யாவரிடமும் இல்லாத 'அரியதோர் செல்வம்' இருக்கிறது—அச்செல்வம், வெள்ளத்தால் அழியாது! வெந்தணலால் வேகாது! கொடுத்தாலும் நிறைவுறுமே அன்றிக் குறையாது! அதுதான், வீரமெழுப்பும் வாலிபர்களின் உணர்ச்சிச் செல்வம். இதனை, அரசு ஆதிக்கக்காரர்களுக்கு, இந்த ஜூலை 15-ல் நாடு முழுமையுள்ள நமது கழகங்கள், அறிவிக்கும் வகையில் கூட்டங்களும்—ஊர்வலங்களும்—துண்டறிக்கைகளும் வெளியிட்டு, கொண்டாடும். ஜூலை 15—கண்டு, ஆண்டு இரண்டாகிவிட்டது—ஆண்டுகளாகிக் கொண்டே போவதால், நாம் அன்று துவக்கிய அறப்போரின் இறுதி இலட்சியத்தை அடைந்துவிட்டோம் என்று பொருளல்ல—ஒரு கட்டம் முடிந்தது! அதைப்போல, இன்னும் பல கட்டங்களை, ஏற்கவேண்டியிருக்கும், திராவிடம். ஏனெனில், திராவிடத்தைப் பிடித்திருக்கும பிணிகளில் பெரிய பிணி, வஞ்சகம்! வந்தவர் வழங்கினர் வஞ்சகத்தை முன்பு—ஏற்றமும் பெற்றனர். இன்று, அதே வழியில், ஏற்றங் கொண்டோராக 'இருப்போரும்' சென்றுகொண்டுள்ளனர். இப்படிப்பட்ட ஆதிக்கபுரியினருடன் போரிட, ஆற்றலும் தியாக நினைவும் அதிகமாகவேண்டும் நமக்கு! கண்ணியமும்கட்டுப்பாடும், ஒவ்வொருவரிடமும் வளரவேண்டும்! பொறுப்பும் சகிப்புக் குணமும், மனமெல்லாம் நிரம்ப வேண்டும்—என்கிற வேண்டுகோளை, உங்களுக்கெல்லாம் தெரிவிப்பதோடு; வீரப்போரில் உயிர் துறந்த உத்தமர்களுக்கும், தியாகத் தழும்புகள் பெற்ற திருவிடச் செல்வங்களுக்கும், திராவிட்நாடு, தனது அன்பு வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறது. வாழ்க, வீரர்கள்! வளர்க, அவர்தம் திருப்பணி!!

# ஆகஸ்டு

———

அக்ரமத்தை ஒழிக்க
அநீதியை அழிக்க
ஆதிக்கத்தை நசுக்க
ஆரியத்தை ஒழிக்க
அறப்போர்! அறப்போர்!

என்று பெரியார் ஆகஸ்டு கிளர்ச்சிக்கான அறிவிப்புகளை நாட்டுக்கு அளித்துள்ளார்.

ஒவவோராண்டும் நடைபெறும் 'ஆகஸ்டு' இந்த ஆண்டு தீவிரமானதாக இருக்கப்போகிறது என்றும் தெரிவித்திருக்கிறுர்.

இந்தி ஆதிக்கக்காரர்களின் போக்கு, எவர் மனதையும் குமுறச் செய்யத்தான் வைக்கிறது.

திராவிடம், கேவலம் கோழைகளின் கூடாரம் என்றே வடவர் தீர்மானித்துவிட்டதுபோலத்தான் தெரிகிறது.

காங்கிரஸ் ஆட்சியைச் 'சுமந்து கொண்டு' அதிலே சுகம் இருப்பதாகவும் கூறிக்கொள்ளும் போக்கினரே மக்கள் மனதை ஆள்கிறுர்கள் என்று வடநாட்டுத் தலைவர்கள் தீர்மானித்துவிட்டனர்.

காமராஜர் ஆட்சியின் காரணமாக, திராவிடம், பரிபூரணத் திருப்திபெற்று, இங்கு ஆனந்தமும் அமைதியும் நிலவுவதாகவும், இந்தச் சூழ்நிலையில், இந்திமட்டுமல்ல, சமஸ்கிருதத்தையே .கட்

(14-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கரமும் மன்னன் சிரமும்

**சி.என். அண்ணாதுரை.**

கிராம்வெல்.

சார்லஸ்.

**நெடுங்** காலத்துக்கு முன்னம், அரசர்களின் சொந்தக் காடுகள் என்று ஏராளமாக உண்டு; நாளாக வாக, காடு அழிக்கப்பட்டு, வயல்களாக்கப்பட்டன, சிற்றூர்கள் வளர்ந்தன. பணம் திரட்டுவதற்கு என்னென்ன வழி என்று தேடியவண்ணம் இருந்த மன்னனுக்கு, இது ஒரு வாய்ப்பாகத் தெரிந்தது. நெடுங்காலத்துக் கணக்கைத் தோண்டி எடுத்து, அரசரின் காடுகளை, சொந்த உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டவர்களைக் கண்டறிந்து, கடுமையான அபராதம் விதிக்கலானான். இரண்டாண்டுகளிலே 23,000-பவுன் திரட்ட முடிந்தது, அத்துடன், சிறு பிரபுக்களின் சீற்றமும் கிளம்பிற்று; மக்களை மதியாது நடத்தும் மமதை ஆட்சிக்கு எதிர்ப்பு வலுத்திடலாயிற்று.

சோப்பு, முதலிய பலசரக்குகளை உற்பத்தி செய்வதற்கு, மன்னனிடம் அனுமதி பெறவேண்டும்—அதற்குக் கட்டணம்; கொழுத்த வேட்டையாயிற்று.

சரக்கு உற்பத்தி செய்ய அனுமதி பெறுவதுடன், அதே சரக்கை வேறு யாரும் உற்பத்திசெய்யாதிருக்கும்படி தடை போடும்படி, மன்னரிடம் உத்தரவு பெற முடிந்தது—பெரும் பொருள் கொடுத்து.

இதல்லாமல், கப்பல் வரி, ஒரு முறைக்கு மூன்று முறை வசூலிக்கப்பட்டது — இலண்டன் நகரில் மட்டும், 104,000 பவுன் திரட்டமுடிந்தது.

மூன்றாவது முறையாகக் கப்பல் வரி விதிக்கப்பட்டபோது, ஹாம்டன், வரி கட்ட மறுத்தான். ஒரு பவுன் தான் வரி, எனினும், மாமன்றம் ஏற்காமுன்னம் போடப்பட்ட வரியை, செலுத்த முடியாது என்று கூறினான், வழக்குத் தொடரப்பட்டது; சிக்கல் வளர்ந்தது, நீதிபதிகளுக்கு!

"மன்னனுக்கு, இவ்விதம் வரிவிதிக்க அதிகாரம் உண்டா?"

"உண்டு"

"மாமன்றத்தின் இசைவு பெற்றல்லவா மன்னன் வரி விதிக்க வேண்டும்—அது தானே முறை. பலகாலும் இருந்து வந்த ஏற்பாடு"

"பொதுவாக அதுதான் முறை—ஆனால் கப்பல் வரி, எல்லா வரிகளையும் போன்றதல்ல. நாட்டுக்கு ஆபத்து நேரிடும்போது, மன்னன், அந்த ஆபத்தைத் தடுக்க, கடற்படையைத் திரட்டவேண்டும்—அது அவர் கடமை, உரிமை — அதற்காகும் பெரும் செலவை நாட்டு மக்களிடம் அவர் வசூலிக்க, உரிமை பெற்றிருக்கிறார். கப்பல் வரி, இந்த வகையைச் சார்ந்தது, எனவே மாமன்றத்தைக் கலந்து தீரவேண்டுமென்பதில்லை"

"சரி, நாட்டுக்கு ஆபத்து என்ன இப்போது? போர் இல்லை, எதிரியின் கலங்கள் எந்தக் கடலிலே உள்ளன?"

"அதெல்லாம், மன்னர் அறிவார்"

"மன்னருக்கு மட்டும்தான், எது ஆபத்து என்பதை அறிந்து கொள்ள முடியுமா? மாமன்றமும் அறிய முடியுமே! ஏன் மாமன்றத்தைக் கூட்டவில்லை?"

"அது வேறு விஷயம்"

"அதுதான் முக்கியமான விஷயம்"

"கப்பல் வரி விதிக்க மன்னருக்கு உரிமை இருக்கிறது"

"காரணம் என்னவென்று கேட்க மக்களுக்கு உரிமை இருக்கிறது"

ஹாம்டன் வழக்கு, இவ்விதம் உருவெடுத்தது. மீண்டும் நாட்டு மக்களுக்கு ஓர் நல் விருந்து, நீதிபதிகளுக்கு மனக் குழப்பம், மறுபடியும், எதேச்சாதிகார ஆட்சிக்குக் கண்டனம் அலை அலையாகக் கிளம்பிற்று. மக்களை மதியாமல் ஆட்சி நடத்தக் கிளம்பிய மன்னன் பணத்துக்கு மட்டும் மக்களை நாடுவானேன்? ஆண்டவன் அருளால் அல்லவா, ஆட்சி கிடைத்தது, மக்களிடம் வரி கேட்பானேன், அதனையும் ஆண்டவன் அருளமாட்டாரா? மக்கள் வித விதமாகப் பேசலாயினர். நீதிபதிகளோ, ஆளுக்கொரு தீர்ப்பளித்தனர். அச்சத்துக்கு ஆட்பட்டவர்கள் அரசன் சார்பிலே! மக்களின் முழக்கத்தின் பொருளை உணர்ந்தோர், மக்கள் சார்பிலே! ஹாம்டன், கப்பல் வரி கட்ட மறுத்து, நீறுபூத்த நெருப்பாக மக்கள் மனம் இருப்பதை மன்னன் அறியச் செய்தான்.

அச்சத்தால் நீதிபதிகள் தாக்கப்பட்டு, ஹாம்டனுக்கு எதிராகத் தீர்ப்பளித்தனர் எனினும், இந்த வழக்கு, மக்களை தட்டி எழுப்பிட உதவிற்று. இந்த வழக்கு பன்னிரண்டு நாட்கள் நடைபெற்றது—வழக்கு மன்றத்திலே விவாதிக்கப் பட்டதை விடத் தீவிரமாக மக்கள் வீடுகளிலும் கடைவீதிகளிலும் இது பற்றிப் பேசினர். நாடெங்கும் இந்தப் பிரச்னை எழுச்சியை உண்டாக்கிற்று. மாமன்றத்தின் தொல்லை இல்லை, நமது விருப்பப்படி ஆட்சி நடத்துகிறோம், இது நிம்மதியாக இருக்கிறது என்று எண்ணிக் களிப்படைந்த மன்னன், வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் மக்கள் உரிமை முழக்கமிடத்தான் செய்கிறார்கள் என்பதை அறிந்தான்—திருந்தினான் என்றால், இல்லை,

மக்கள் இன்னும் திருந்தவில்லையே என்றெண்ணி வருந்தினன்.

மாமன்றம் முதலில் உரிமை முழக்கம் கிளப்பிய போதே, மன்னன் சார்பிலே பேசும் பிரமுகர் ஒருவர், "பல்வேறு நாடுகளிலே, மன்னர்கள், மாமன்றங்கள் வரம்பு மீறி நடந்துகொள்ளத் தொடங்கியதும், கலைத்து விட்டனர்; ஆட்சி, மன்னராலேயே நடத்தப்படுகிறது; இங்குதான் மாமன்றம் இருக்கிறது, இதையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள்" என்று எச்சரித்தான்.

"கேட்கும் தொகையைத் தந்துவிடுங்கள்; மாமன்றம் மன்னன் சொல்கேட்டு நடந்து, மதிப்புப் பெறட்டும்; வீண்பேச்சில் ஈடுபட்டு, பணம்தர மறுத்தால், காரியம் ஏதும் கெட்டுப்போகாது; பணம்பெற வேறு வழிகள் உள்ளன" என்று மன்னனே மிரட்டினன்.

"மிரட்டுகிறேன் என்று எண்ணுதீர்கள்—எனக்கு ஈடானவர்களைத்தான் நான் மிரட்டுவேன், உங்களை அல்ல" என்று ஏளனமும் ஆணவமும் குழைத்துக் கூறினன், வேறோர் சமயத்தில், வேந்தன்.

இவ்வளவு வெளிப்படையாக விபரீதப்பேச்சுப் பேசிய தற்குக் காரணம், சார்லசின் தனிப்பட்ட குணக்கேடல்ல, அவன் கொண்டிருந்த தத்துவம், அவனை அங்ஙனம் ஆட்டிப்படைத்தது.

மன்னனிடம் படை இருந்தது; ஆனால் உடைகூடச் சரியாகக் கிடையாது, போர்வீரருக்கு; பாசறைச் செலவுக் குப் பணம் இல்லை, அவர்களுக்குச் சம்பளம் சரிவரத் தரப்படுவதில்லை. இந்நிலையில் எப்படிப்பட்ட குணமுடை யவர்கள் படையில் சேருவர், சேர்ந்த பிறகு அவர்கள் குணம் மேலும் எப்படிக்கெடும்! ஓநாய்கள் போலாயினர். மன்னன், தனிப்பட்டவர்களின் வீடுகளிலே, இந்தப்படை வீரர்கள், கட்டாய விருந்தினராக இருக்கலாம், என்று அனுமதித்தான்.

கண்ணியமான குடும்பம், கடைவைத்துப் பிழைக்கும் குடும்பம், சிறு பண்ணைவைத்துப் பாடுபடும் குடும்பம், இங்கெல்லாம், பதின்மர் இருபதின்மர், ஐவர், நால்வர், அறுவர், இதுபோலப் புகுவர், படைவீரர்கள். விருந் தளிக்க வேண்டும், பணிவிடை செய்யவேண்டும், வேண் டும் பொருளைத் தரவேண்டும்; வெறியாட்டமாடுவர், அதனை வேடிக்கையாகக் கருதிக்கொள்ள வேண்டும், கன்னியரைக் கட்டித் தழுவுவர், முதியவரை எட்டி உதைப்பர், கதவுகளைத் தூளாக்குவர், கண்ணுடிச் சாமானை உடைப்பர், காகூவெனக் கத்துவர், அதனை இசை என்று கொள்ளவேண்டும்! நாடு தாங்கிக் கொள்ளுமா? நல்லாட்சியில் இங்ஙனம் நடைபெறுமா? சர்க்காரிலேயோ சம்பளம் சரிவரத்தரப்படுவதில்லை, எனவே சிப்பாய்கள், சீரழிந்த குணத்தினராயினர், குடும்பம் பல, கொடுமைக்கு ஆளாயின! முதியவர் கண்ணீர் சொரிந்தனர்; வாலிபர் சச்சரவிட்டுச் சித்திர வதைக்கு ஆளாயினர்; கன்னியர் கற்பிழந்தனர்; நாடு மதிப்பிழந்தது. மன்னன் இந்தக் காட்டு முறையைப் புகுத்துவதால் விளையும் கேடுபற்றி எண்ணிப்பார்க்கவு மில்லை. மன்னன் அமைத்துள்ள படையைக் காப்பாற்ற வேண்டியது மக்கள் கடமை என்று கருதினன். இந்த ஒரு சம்பவம் மட்டும் போதும், நாட்டுமக்களைக் காட்டு மிருகமாக்க! எனினும், மக்கள் வரம்பு மீறிவிடவில்லை. பொறுத்துக்கொண்டனர், பொழுதுவிடியும், பொல்லாங்கு மடியும் என்று நம்பிக்கிடந்தனர். யாரிடம் முறையிடுவது இந்தக் கேவலமான கேடுபற்றி! மாமன்றம் கூடினுல், எடுத்துரைக்கலாம். ஆனுல், மன்னன்தான் மாமன்றம் கூட்டவில்லையே! என்செய்வர்! ஏங்கினர், கண்கசக்கிக் கொண்டனர்!

கட்டாயக்கடன், பலவந்தமான விருது, காட்டுவரி, கப்பல்வரி, எனும் கொடுக்குகள் கொட்டும், மக்கள் துடியாய்த் துடிப்பர், கையில் பொருளும் இல்லையே என்று அழுவர், பணம்தர இயலாதவரை, மன்னன் கட்டாயப்படுத்திப் படையில் சேரச்செய்வான், அல்லது வெளிநாடுகளுக்குத் துரத்துவான். கலாம் விளையும் என்று குறிதெரிந்தால், அல்லது தெரிவதாக எந்த அதிகாரியாவது சாடி சொன்னுலும்போதும் இராணுவச் சட்டம் பிறக்கும், நில் அங்கே, யார் போகிறது? என்று மிரட்டும் குரல் கேட்கும், வேட்டுச்சத்தம், கீழே பிணம்! இந்த முறை அமுலுக்கு வந்துவிடும்.

லாட், வென்ட்ஒர்த், இருவரும் வகுத்த திட்டம் இது.

மன்னன், மாமன்றத்தின் உதவியை நாடித்தான் பணம் பெறமுடியும் என்ற நிலையை மாற்றிவிடவேண்டும்.

மக்களை எந்த நேரத்திலும் அடக்கிவிடக் கூடிய அளவு படை மன்னனிடம் இருக்கவேண்டும்.

சில காலம் இதுபோல நிலைமை நீடித்தால், அச்சம் பிடித்துக்கொள்ளும், உரிமை முழக்கம் மடியும், மன்னன் ஈடு எதிர்ப்பின்றி இருக்கலாம், சார்லஸ் கொண்ட தத்து வம், அழிக்கப்பட முடியாததாகிவிடும்.

ஆட்சியை எதிர்ப்பது பேராபத்து என்று உணரும் வகையில், தண்டனைகள் இருத்தல் வேண்டும்.

இந்தப் போக்குடன் இருவர்; நாடு, சீரழியாது போகுமோ! ஆனுல் அந்த இருவரும், மன்னரும், கொடுமைகளைத் தாங்கிக்கொள்ளும் பழக்கத்தை, உரிமை யின் அருமையை அறிந்த மக்கள் பெற்றுவிடுவது அணைக்கமுடியாத பெருநெருப்பாகமாறிவிடும் என்ற உண் மையை அறியவில்லை. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, கரத்தைக் காட்டி மன்னரின் சிரத்தைக் கிள்ளி எறியும் ஆற்றலை மக்கள் பெறுவர் என்பதை எதிர்பார்க்கவில்லை. உலைக்கூடத்திலே, காய்ச்சிக் காய்ச்சி வடிக்கப்படும் வேலும் வாளும், களத்திலே பிணங்கள் விழவும் கழுகுகள் கொத்தித் தின்பதற்காக வட்டமிடவுமான காரியத்துக்கு ஓர் நாள் பயன்படுகிறது! மக்கள் கொடுமைக்கு ஆளா னது, அவர்களை அந்த நிலைக்குக் கொண்டுசெல்லும் என்பதை அவர்களால் யூகித்தறிய முடியவில்லை. தங்கள் திட்டம் வெற்றி பெறுவதாகவே எண்ணினர், ஏமாந் தனர். (தொடரும்)

## அமெரிக்க ஜனநாயகம்!

"எங்கள் நாட்டிலே ஜனநாயகம் எவ்வளவு நேர்த்தியான முறையிலே இருக்கிறது தெரியுமா!" என்று ஒரு அமெரிக்கன் பெருமிதத்துடன் கேட்டான்.

"எப்படி இருக்கிறது சொல்லேன், கேட்போம்" என்று கேட்டான் இங்கிலீஷ்காரன்.

"சொல்கிறேன் கேள். ஒரு பெரிய தொழிற் சாலையில் ஒருவருக்கு வேலைகிடைக்கிறது என்று வைத்துக்கொள். முதல் நாள் வேலைக்குப்போன தும், முதலாளி புன்னகைபூத்தமுகத்துடன் வரவேற் கிருர். சௌக்யமா என்கிருர், எந்தப் பகுதியில் வேலை செய்யவேண்டுமோ அங்கு அவரே அழைத் துக்கொண்டு போய்க் காட்டுகிருர். பிறகு மாலையில் வேலைமுடிந்து வீட்டுக்குப் புறப்பட்டதும், வாசற்படி யில் சந்தித்து, "முதல் நாள் தானே! வேலை கடின மாகத் தெரிந்திருக்கும்" என்று ஆறுதல் மொழி பேசிவிட்டு, 'என் மோடாரிலேயே ஏறிக்கொள்ளுங் கள், வீட்டுக்குக் கொண்டுபோய் விடுகிறேன்' என்று சொல்லி அழைத்துச் செல்கிருர்-வழியில் காபி சாப் பிடுவோம் என்று கனிவுடன் அழைத்துச்சென்று விருந்தளிக்கிருர்! எப்படி இருக்கிறது எங்கள் நாட்டு ஜனநாயகம்! தொழிலாளியை முதலாளி அவ்வளவு அன்புடன் நடத்துகிருர்" என்ருன்.

"இவ்விதமாகவா முதலாளி உன்னிடம் நடந்துகொண்டார்?" என்று இங்கிலீஷ்காரன் கேட்டான்.

"என்னிடமல்ல! என் தங்கையிடம்!" என்று பதிலளித் தான் அமெரிக்கன்.

# அங்கே பவனம் இங்கே படகு!

தம்பி,

ஆறடுக்கு மாடிகொண்ட மாளிகை எழும்பப் போகிறது—பன்னிரண்டு இலட்ச ரூபாய் செலவில்!

சர்க்காரின் திட்டங்களிலே ஒன்றுபோலும் என்று எண்ணிவிடாதே தம்பி! ஒரு சமாஜம் கட்டப்போகும் அரண்மனை இது. அரண்மனைமட்டுமல்ல, ஆராய்ச்சிக்கூடமுங்கூட!

பிரஹத் பாரதீய சமாஜம் என்பது இதன் பெயர்—இதன் பணி, வெளிநாடுகளிலே சென்று தங்கியுள்ள இந்தியர்களுக்கும் இங்குள்ள இந்தியர்களுக்கும் இடையே தொடர்பு, தோழமை ஏற்படுத்திவைப்பது. இதுமட்டுமல்லாமல், வெளிநாடு சென்றோரின் வரலாறுபற்றிய நுணுக்கங்கள், செல்லவேண்டிய காரணம் என்ன, சென்றபோது அடைந்த சிரமம் எப்படிப்பட்டது, சென்று அங்கு கண்ட அனுபவம் எத்தகையது என்பனபோன்றவைகளைக் குறித்து ஆராய்ச்சிகள் நடத்தப்படும்.

இத்தகைய நேர்த்தியான நோக்கத்துக்காக, அண்ணாந்து பார்ப்போரின் கழுத்து, வலி எடுக்கும் அளவு உயரமாக, அன்னிய நாட்டினர் பார்த்து ஆச்சரியப்படத்தக்க வகையில், சமாஜக் கட்டிடம் சமைக்கப்போகிறார்கள்.

மாளிகை அமைக்க 12 இலட்சம், அதிலே மற்ற வசதிகள், ஒரு படிப்பகம் உட்பட காண மற்றோர் நாலு இலட்சம்.

இதற்கு நிதி குவிகிறது.

இந்திய சர்க்காரிடமிருந்து இரண்டு இலட்ச ரூபாய் நன்கொடை எதிர்பார்க்கப்படுகிறது. கருத்தறிந்தால் போதாதா, நன்கொடை வாயுவேக மனோவேகம் என்கிறார்களே, அவ்விதம் வந்து சேரப்போகிறது.

பம்பாயில்!—இங்கா கட்டுவார்கள்! பம்பாயில்தான்.

கோடீஸ்வரர்களின் கோட்டத்தில்தானே, இத்தகைய கொலு மண்டபம் அமைக்க முடியும்; அமைக்கிறார்கள்.

இந்தப் பவனத்தில், வெளிநாட்டார் வந்து தங்க, வகை வகையான ஏற்பாடுகள்.

வெளியிலிருந்து இங்கு வரும் மாணவர்களுக்கு அறுசுவை உண்டி.

செவிச்சுவை உண்டு.

சிந்தனைக்கும் விருந்து தருவார்கள்—படிப்பகமூலம்.

இவைகளுக்கான நிதி திரட்டும் ஏற்பாடு, விமரிசையாகத் துவக்கப்பட்டு, வேகமாக வளர்ந்து, இப்போது வெற்றிக் கட்டத்தை நோக்கித் துரிதநடைபோட்டுச் செல்கிறது.

வெளிநாடுகளிலே வதியும் இந்தியர்கள்!—என்ற சொற்றொடரைக் கவனித்தாயா, தம்பி, பொருள் எளிதாயிற்றே, இதை ஏன் கவனப்படுத்துகிறாய், என்று கேட்டுவிடாதே, பொருள் எளிதுதான், ஆனால் இதிலே புதைபொருளும் இருக்கிறது, அதைக் கண்டெடுப்பது அவ்வளவு எளிதல்ல.

இந்தியர்கள் என்ற பட்டியலில் நாமும் இருக்கிறோம்.

நம்மவர்களும் வெளிநாடுகளிலே இருக்கிறார்கள்—ஆமாம்—பல இலட்சம்! வடக்கத்தியார்களும் வெளிநாடுகளிலே இருக்கிறார்கள். வெளிநாடுகளிலே சென்றுள்ளவர்களை, வடவர், திராவிடர் என்று இரு பிரிவாக்கிக் காட்டுவதற்குக் காரணமும் இருக்கிறது—அதிலே நாடு அறியவேண்டிய கருத்தும் நிச்சயமாக இருக்கிறது. வடவர், வெளிநாடுகள் சென்று வதிகிறார்கள்—திராவிடர் வெளிநாடு சென்று வதைபடுகிறார்கள். வெளிநாடு சென்றுள்ள வடவரில் பதினான்கணா பாகம், முதலாளிகளாய், நிலச்சுவான்தார்களாய், ஆலைகளின் சொந்தக்காரர்களாய், வாழ்கிறார்கள்.

அவர்கள் சென்றுவாழும் இடங்களிலே அரசியல் சூத்திரக் கயிறுகளையும் கைப்பற்றி இருக்கிறார்கள், வெளிநாடு சென்றுள்ள திராவிடர்களிலே பதினைந்தரை அணா பாகம், கூலிகளாகி, வதைபடுகிறார்கள்!

இந்தப்பவனம் இருக்கிறதே தம்பி, இது, வெளிநாடு சென்று வாழ்பவர்களின் பொருட்டு, வடநாட்டவர் பொருட்டு, கட்டப்படுகிறது, பம்பாயில்.

வெளிநாடு சென்றுள்ள வடவரிலும், கிழக்கு ஆப்பிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் ஆகிய பகுதிகளிலே சென்று தங்கி, சீரும் செல்வாக்கும் பெற்றுள்ள வடவர்களுக்கு அங்கே உள்ள பிரச்சினை, சொத்துகள் வாங்க உரிமைதரப்படவேண்டும், அரசியல் ஆதிக்கத்திலே கிடைக்கும் பங்கின் அளவு அதிகமாகிக் கொண்டிருக்க வேண்டும், வேறுவேறு நாட்டவரிடமிருந்து கிளம்பக்கூடிய வியாபாரப் போட்டிகளை வேரறக் களைவதற்கு இந்திய சர்க்கார் தக்க திட்டம் தயாரித்துக்கொண்டு பணியாற்ற வேண்டும், என்பவைகளாகும்.

கூலி போதவில்லை, கும்பி நிரம்பவில்லை, கொட்டும் குளிரைத் தாங்கிக்கொள்ளச் சக்தியில்லை, கொடுக்கும் கசையடியால் பீறிட்டு வரும் குருதியைத் துடைக்கவும் நேரமில்லை, வேலையில் நிம்மதியுமில்லை, அது நிலைத்து இருக்கும்

என்பதற்கும் உறுதி இல்லை,—இவைகளல்ல, பவனபுரியினருக்குள்ள பிரச்னைகள்.

இந்தப் பிரச்சினைகளெல்லாம் நம்மவர்களுக்கு—நாடாண்ட இனம் என்று கூறுகிறோமே, அந்தத் திராவிட மக்களுக்கு—வெளிநாடுகளிலே வாழ்பவர்களுக்கு அல்ல—வதைபடுபவர்களுக்கு!

பவனம் அமைகிறது, அவர்களுக்கு!

படகு அழைக்கிறது, நம்மவர்களை!

பல்வேறு வெளிநாடுகளிலே பரங்கியர் போலாகிவிட்டுள்ளனர், அவர்கள்.

சென்ற இடமெங்கும் வறுமைச் செந்தேள் கொட்டுகிறது, திராவிடரை.

தேயிலைத் தோட்டம் அமைக்கிறார்கள், மோடார் பஸ்கள் நடத்துகிறார்கள், பலசரக்குக் கிடங்குகள் அமைக்கிறார்கள், அவர்கள்.

தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து, அட்டைக்கடி அரணைக்கடி பெற்று, ஆவி பிரியாதது ஒன்றுதான் பாக்கி என்று கூறத்தக்க அவலநிலையில் இருக்கிறார்கள், திராவிடர்!

ராஜாங்கத்திலே நாங்கள் ஏன் நடுநாயகர்களாக்கப்படக் கூடாது? என்று கேட்டு, புருவத்தை நெரித்துக் காட்டுகிறார்கள், அவர்கள்.

ரப்பர் பாலை எடுத்துவிட்டு, இராத் தூக்கமின்றி, கைகளைப் பிசைந்தும், கண்களைக் கசக்கிக்கொண்டும், கலங்கி நிற்கிறார்கள், திராவிட மக்கள்.

அவர்களின் எதிர்காலத்தை மேலும் எழிலுள்ளதாகவும், நிலையை ஏற்றமுள்ளதாகவும் செய்ய பவனம்!

நம்மவர்களுக்கு, இந்த ஒரு வேளைக் கஞ்சியும் ஏன் தரவேண்டும் என்று சிங்களம் பேசிக்கொண்டு, சிங்கக்கொடி சர்க்கார், படகுகளைக் காட்டுகிறது, ஏறிச் செல்—எங்கள் நாட்டிலே இடமில்லை, போ, போ! என்று.

இவர்களுக்கு, ஒரு குடில் இல்லை இங்கு.

அவர்களுக்காக அக்கரை காட்டும் அன்பர் குழாம், ஆறடுக்கு மாடி கட்டுகிறது—ஆனந்தத்துடன் சிந்து பாடுகிறது!

ஏன்?

அவர்கள், ஆளும் இனத்தினர்! திராவிடர், அடிமை இனத்தவராக்கப்பட்டுவிட்டனர்!

வேங்கைக் காட்டிலேதான் நரி ஆட்சி நடக்கிறதே — நரிக்குத்தானே பிறகு, எல்லா வைபவமும் கிடைக்க முடியும்.

திராவிடர்கள், இலங்கையில், பர்மாவில், மலாய் நாட்டில், எங்கும் இன்று இடர்ப்பட்டு, இழிமொழிகளைத் தாங்கிக்கொண்டு உள்ளனர். அவர்களின் வாழ்வு துலங்க, வகை என்ன, வழி என்ன என்பதற்கு ஓர் அறிவியற்கூடம் இல்லை, ஆற்றல் அரங்கு காணோம், அங்கே ஆறடுக்கு மாடி அமைத்து அந்தப் பவனத்தில் ஆராய்ச்சி நடத்தப்போகிறார்கள், ஏன் சென்றனர்? எப்படிச் சென்றனர்? சென்று எவ்வகையில் அங்கு வாழ்வு பெற்றனர்? என்பனபற்றி! துரத்தி அடிக்கிறதே இலங்கை சர்க்கார், அந்தத் துயரக்கடலில் மூழ்கித் தவிக்கும் திராவிட மக்களுக்கு, மீட்சிக்கு மார்க்கமுண்டா, என்று கேட்க நாதியில்லை. கவனிக்க நேரமில்லை, கண் இருக்கிறது, கருத்தும் இருக்கிறது, ஆனால் இந்தப் பிரச்சினையைக் கவனிக்க அல்ல.

இலங்கை சர்க்கார், திராவிட மக்களைத் தேளெனக் கொட்டி, அம்மக்கள் தேம்பித்தவித்துக் கொண்டிருந்தபோது விஜயலட்சுமி பண்டிட் அங்கு பவனி சென்றதும், அதுபோது, ஆசியாவின் ஜோதியின் குடும்பக் குமரிகள், குதூகல விருந்திலே கலந்துகொண்டது மட்டுமல்ல, கொத்தலாவலையுடன் மேனாட்டு முறையில் நடனமாடி ரசித்ததும் தம்பி, நாடு கண்ட காட்சி! கண்ணீர் பொழிகிறான், காவிரிக் கரைக்காரன்! பன்னீரில் குளித்தெழுந்து, பரிமளகந்தம் பூசி பட்டுபட்டாடை அணிந்துகொண்டு, பரங்கியர் முறையிலே 'பால் டான்சு' ஆடினர், பண்டிதரின் இல்லத்துச் செல்வக் குமாரிகள்—படாடோபம் கூடாது—ஆர்ப்பாட்டம் ஆகாது — செல்வச் செருக்கு கூடாது—ஏழை மக்கள் புழுப்போலத் துடிக்கும்போது பணக்காரர்கள் பகட்டாக வாழ்ந்து காட்டுவது வெந்த புண்ணிலே வேல் சொருகுவதாகும் என்று மற்றவர்களுக்கு உபதேசம்செய்யும் பண்டிதர், இந்த அக்ரமத்தைக் கண்டித்தாரில்லை.

பிரன்ச்சுப் புரட்சி வெடிக்கு முன்பு இதுபோல நடைபெற்றதுண்டு—மாளிகையிலே மதுக்குடம் உருளும், இடைநெளியும், கடை சிவக்கும், கனவான் கனகப் பந்துகளைப் பெறுவார், காரிகையர் கோலமயில் போலாடுவர், குயிலெனக் கூவுவர், சாகசச் சமரில் யாருக்குயார் தோற்பதுஎன்பதறிய முடியாதது பிரச்னையாகும், இந்த அநீதியைத் தடுத்திட "காய்கதிர்ச் செல்வனே! நீயாவதுமுயன்றுபார்" என்று கூறிவிட்டு நிலவு மங்கை மறைவாள், கோழி கூவும், கோகிலங்களின் குறட்டை கேட்டு அஞ்சும்,—அதே நாட்டில், வயலில் செந்நீரும் கண்ணீரும் சேரும், கருவுற்ற காரிகையின் கதறலொலியைக் கேட்கச் சகியாத கணவன் கர்த்தரின் ஆலய மணிச் சத்தத்தைக்கிளப்பி, சிந்தனையைவேறுபக்கம் திருப்பிட முயல்வான், சவுக்கடி ஒருபுறம், சகதியில் வீழ்தல் மற்றோர்புறம், பட்டினிச் சாவு ஒரு பக்கம், பயங்கர நோய் மற்றோர் பகுதியில், என்று இவ்வண்ணம் ஏழை எளியோர் வதைபடுவர்.

பவனம் அமைக்கிறார்கள், பம்பாயில், திருட்டுப்படகேறியா வந்தாய், திரும்பிப் போ, - என்று துரத்துகிறார் கொத்தலாவலை, திரு இடத்தவரை.

வட நாட்டினன் என்றால் அவன் அகதியாகட்டும் அன்னிய நாடுகளில் வதிபவனாகட்டும், ஆளும்

## ஐந்தாண்டுத் திட்டம்!

**பத்திரிகை அதிபருக்கு !!**

முதலாண்டு:- மாகாணத்தில், மூடப்பட்ட ஏதேனும் ஒரு பத்திரிகாலயத்தை விலைகொடுத்து வாங்கிவிடுவது.

இரண்டாமாண்டு:- அதிகப் பிரதிகள் செலவாகாமற் போனாலும் பரவாயில்லை! சர்க்காருடைய உதவியால் விளம்பர வருமானத்தைப் பெருக்கிக் கொள்வது.

மூன்றாமாண்டு:- பத்திரிக்கையின் பிரதிகளை அதிகமாக்கிக் காட்டுவதற்காக, போட்டியாக உள்ள பத்திரிகைகளை வாங்கிவிடுவது.

நாலாமாண்டு:- அரசியல் செல்வாக்கு பெற, புது டில்லியில் ஒரு பதிப்பு வெளியிடுவது.

ஐந்தாமாண்டு:- பத்திரிகையாளர் சங்கத்தில், 'பத்திரிகா தர்மம்' பற்றி உபதேச உரையாற்றுவது!

—அப்பால்.

இனத்தவன் என்ற காரணத்தால் மதிப்பும் சலுகையும் பெறுகிறான்.

அகதிகளுக்காக இந்திய சர்க்கார் அள்ளித்தந்த பணம் கொஞ்சமா.

அகதிகளுக்கு இங்கு எல்லா வகையான வியாபாரமும் செய்துகொள்ள, வழியும் வசதியும் தரப்பட்டன.

புதிதாக அங்காடிகளை அமைக்கப்பட்டன.

அலுவலகங்களிலே நுழைவர் அகதிகள்—ஆடவனாக இருந்தால் ஆத்திரத்தோடு சொல்வான், நானோர் அகதி—என் சொத்து அத்தனையும் பாகிஸ்தானில் பறிபோய்விட்டது—பத்து ரூபாய் தருவாயா—என்று கேட்பான், இரண்டோ மூன்றோ கிடைக்கும், இவ்வளவு அற்பனா நீ, என்று கேட்பதுபோல, நம்மை முறைத்துவிட்டு, பணத்தைப் பெற்றுக்கொண்டு போவான்—ஆரணங்குக்கோ இதழில் கீதம், கண்ணில் நடனம், — நம்மவர்களோ, நாலோ ஐந்தோ — அதிகம் தர இயலவில்லையே என்ற கவலையுடன் —தருவர். ஒரு நமஸ்த்தே, கிடைக்கும், ஒரு பெருமூச்சு பிறக்கும்.

அகதிகளுக்காக ஆற்றோரத்தில் அழகு நகர்கள் உண்டாக்கப்பட்டன — திராவிடத்திலே அவர்களுக்கு வாய்ப்புகள் தரப்பட்டன.

இதோ இலங்கையில் இடர்ப்படுகிறார்கள் திராவிடர்—நாடற்றவர்கள் என்று நையாண்டி செய்யப்படுகிறார்கள்—யார் அவர்களைக் காப்பாற்றக் கவலை கொள்கிறார்கள்.

இந்தப் பிரச்சினையை சென்னை சர்க்கார் கவனித்துக்கொள்ளும் என்று தேஷ்முக் தெளிவளிக்கிறார், எவ்வளவு திகைப்பூட்டும் பிரச்சினையையும் மிகச் சாதாரணமாகக்கருதி மிகத் தாராளமாக வாக்களித்துக் கொண்டுவரும் காமராஜரோ, இது ஒரு பிரச்னையே அல்ல—இலங்கையிலிருந்து வருபவர்கள், தாங்களாகவே இங்கு வேலைதேடிக்கொள்வார்கள், பிழைத்துப் போவார்கள், என்று கூறிவிடுகிறார்.

பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவர், படேல், கிழக்கு ஆப்பிரிகா சென்று, அங்குவாழும் இந்தியர்களிடம் பல இலட்ச ரூபாய் வசூல் செய்துகொண்டு வந்திருக்கிறார் — இந்தப் பவனம் அமைக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறார்.

இலட்சக்கணக்கிலே பணம் தந்து, பட்டேலை மகிழ்விக்கச் செய்ய முடிகிறது, வடவரால்.

கண்ணீரைத்தான் காண்கிறோம் இலங்கையில் இடர்ப்படும் திராவிடரிடம்—அதைக் காண வெட்கமும் வேதனையும் அடைகிறோம்.

அவர்களுக்கென்று இங்கோர் தாயகம் இருக்கிறது.

எல்லா வளமும் கொஞ்சும் நாடு.

எனினும் அவர்களுக்கு இங்கு ஒரு கவளம் சோறு இல்லை.

அவர்கள் படும் அவதியைத் துடைத்திடும் ஆற்றல் படைத்த ஒரு சர்க்கார் இல்லை.

அவர்கள் சொந்த நாட்டுக்கே அகதிகளாக வந்து சேரும்போது, விதவை மகளைக் கட்டித் தழுவி விம்மிடும் நலிவுற்ற தாய்போலாகிறது நாடு.

வாழ்கிறார்கள் வளமாக வெளிநாடுகளிலேயும், வடவர்; அந்த வசிகரத்தின் மெருகு கெடாதிருக்கச் செய்வதற்காக பம்பாயில் பவனம் கட்டுகிறார் பட்டேல்.

"தாராவி எங்கே இருக்கிறது?" —என்று நான் கேட்டேன்—என்னை அழைத்துச் சென்ற பெரியாரிடம்.

பம்பாய் சுயமரியாதை இயக்கத் தோழர்களின் அழைப்பின்பேரில் அங்கு போயிருந்தோம்.

"தாராவியா?..." என்று கேட்டபடி, இப்புறமும் அப்புறமும் பார்த்தார்—அவருடைய நாசி விரிந்தது, குவிந்தது, — என்ன இது என்று நான் கூர்ந்து கவனித்தேன். "இதோ அருகாமையில்தான் தாராவி—நாற்றமடிக்கிறதே, தெரியவில்லையா" என்று கேட்டார்—கேட்டுவிட்டு விளக்கமளித்தார், தோல் பதனிடுகிறார்கள், அந்தத் துர்நாற்றம் அடிக்கிறது, இப்படிப்பட்ட இடம்தானே நமது மக்களுக்குக் கிடைத்திருக்கும், அதனால்தான் தாராவி அருகாமையில் இருக்கிறது என்று கூறினேன் என்றார். உண்மையாகவே, தாராவியை நெருங்கிக் கொண்டிருந்தோம்.

திராவிடர், வடநாடு ஆனாலும், இலங்கையானாலும், சென்று வாழ்கின்றார்கள் என்பதல்ல பொருள், வதைபடுகிறார்கள்.

கங்கைகொண்டான், இமயத்தில் கொடி பொறித்தான், ஈழம் வென்றான், கடாரம் வென்றான், சாவகம் சென்றான், யவனம் கண்டான் என்றெல்லாம் ஆராய்ச்சி அறைகிறது—உண்மையிலேயே, நமது இதயத்திலே அறைவதுபோலத்தான் இருக்கிறது, ஆராய்ச்சியாளர் கூறும்போது. இன்றோ! பம்பாயில் பவனம் கட்டுகிறார்கள், பதினாறு இலட்சம் செலவிடுகிறார்கள்—பாண்டியன் பரம்பரை என்ற பட்டயம் பெற்றுள்ள திராவிடர்கள் 'கள்ளத் தோணிகள்' என்று நிந்திக்கப்படுகிறார்கள்.

தொழிலெல்லாம் அங்கே, துரைத்தனம் அங்கே என்று ஆகிவிட்டபோது, ஒரு பவனந்தானா கட்டமுடியும்!

வடநாடு, தென்னாடு என்று பேதம் பேசாதே, பவனம் பம்பாயில் இருந்தால் என்ன, அதற்குச் சாக்கடைச் சுத்தம் செய்யும் மேஸ்திரியார் தெரியுமா? நான்தான்; தெரிந்துகொள் — என்று நம்மை மிரட்டுகிறார் அழகேசனார். அவர்களின் கருத்திலே, இலங்கைத் திராவிடர் பிரச்சினை என்று ஒன்று இருப்பதாகக்கூடத் தெரிவதில்லை—பிரன்சுப் பிரபுக்களிடம் பில்லைச் சேவகம் பார்த்துப் பிழைத்துவந்தவர்கள், பிரபு, போதை மிகுதியால் மயங்கிக் கிடக்கும் நேரத்தில், கோப்பையில் மிச்சமாக இருந்த பானத்தைப் பருகிவிட்டு, நானும் இப்போது பிரபுதான் என்று குளறுவராம்.

## ஐந்தாண்டுத் திட்டம்

*

### பாமரனுக்கு!

முதலாண்டு:- அகதிப் பிரச்னையால் வரும் அல்லல், கலகத்தால் வரும் கலக்கம், கொள்ளையால் ஏற்படும் நஷ்டம், ஆகியவைகளை அனுபவிப்பது.

இரண்டாமாண்டு:- வேலையில்லாத் திண்டாட்டம், வெட்டுக்கிளியால் நாசம், கள்ள மார்க்கட் கொள்ளையரால் கொடுமை ஆகியவைகளை அனுபவிப்பது.

மூன்றாமாண்டு:- உரிமைகள் பறிக்கப்பட்டு, உபத்திரவங்களுக்கு ஆளாவது.

நாலாமாண்டு:- கன்ட்ரோல், கன்ட்ரோல் ஒழிப்பு, அகவிலை, ரயில்வே கட்டணம் முதலியன உயருவது போன்ற தொல்லைகளை ருசி பார்ப்பது.

ஐந்தாமாண்டு:- ஐந்தாண்டுத் திட்டத்தைச் சகித்துக்கொள்வது!

—அப்பாஸ்

கேளுங்கள் கோவைக்கோமானை, விருதுநகர் அண்ணலை, சோப்புச் சீமானை, தண்ணீரில்லாத ஆறுக்கு இரும்பே சேராத பாலம் கட்டிப் பரவசப்படும் ஒழலூர் கனவானை—செச்சே! தொழில் எங்கே வளர்ந்தால் என்ன, எல்லாம் இந்தியாவில் தானே—என்று சமரசம் பேசுகிறார்கள்—அதற்காகச் சம்பளமும் தருகிறார்கள்!

*

ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்

கியாகர்னு பகவான்
வைஷ்ணவ ஜனதோ

இப்படிப் பஜனைகளைப் பாடுகிறார்கள்; பகவந் நாமத்தைக் கூறுகிறார்கள் பாலகர்கள்.

பாபா! மாராஜ்! பையா! பாய்யோ! சேட்ஜீ! நமஸ்த்தே! நமஸ்த்தே! என்று கூவிப் பிச்சை எடுக்கிறார்கள்.

உத்தரப் பிரதேசம், அசாம், பீகார், மேற்கு வங்கம், இங்கிருந்தெல்லாம், சிறார்களை ஒரு கயவாளிக் கூட்டம் ஏய்த்து அழைத்துக்கொண்டு போகிறதாம், உங்களுக்கு நல்ல சாப்பாடு, நல்ல துணிமணி, படிப்பு சொல்லித் தருகிறோம் எங்களோடு வந்துவிடுங்கள் என்று ஆசை வார்த்தை சொல்லி ஏழை எளியவர் வீட்டுப் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போகிறார்கள். தொலைதூரத்தில் அழைத்துச் சென்று அந்தச் சிறுவர்களை பிச்சை எடுக்கச் சொல்லி பயிற்சி அளிக்கிறார்கள். பஜனை பாட, பல்லைக் காட்டிக் கெஞ்ச, நமஸ்த்தே சொல்ல, கல்மனக்காரனின் மனதையும் கரையச் செய்யும்வகையில் கண்ணீர் சிந்த—இத்தகைய பாடம் சொல்லிக் கொடுத்து, சிறார்களை பிச்சை எடுக்கச் செய்கிறார்கள். அந்தச் சிறுவர்கள், இம்சை தாளாமல், பிச்சைக்காரர்களாகி, குழல் ஊதிக்கொண்டும், மேளம் கொட்டிக்கொண்டும், உண்டி குலுக்கிக்கொண்டும், உள்ளம் உருகச் செய்யும் பாடல்களைப் பாடிக்கொண்டும், தெருத் தெருவாகப் பிச்சை எடுத்து, அந்தக் கயவர்களிடம் பணத்தைக் கொடுக்கிறார்களாம் — சோறு, கந்தல்— இவை கிடைக்குமாம் சிறுவர்களுக்கு. ஓடிவிட முயன்றால், உதை, குத்து. பிச்சைக் காசு குறைந்தால் தலையில் குட்டு, கன்னத்தில் அறை. இப்படிக் கொடுமைகள்,

1400-சிறுவர்கள், 147-சிறுமிகள் காப்பாற்றப்படும் ஒரு ஆஸ்ரமத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்—நீங்கள் தருகிற பணம் அந்த ஆஸ்ரமத்துக்குத்தான் என்று புளுகிப் பிச்சை எடுக்கும்படி சிறுவர்களை, அக்கயவர்கள் மிரட்டி வேலைவாங்கி வருகிறார்கள். போலீசுக்கு, இந்த அக்ரமம் தெரிந்து இப்போது கயவர் சிலர் பிடிபட்டதாகச் செய்தி வந்திருக்கிறது.

டில்லி சர்க்காரில் மந்திரி வேலை பெற்றுக்கொண்டு, இங்கே அடிக்கடி பவனிவந்து, வடநாடு தென்னாடு என்று பேசுவது கூடாது, அகில பாரதம், ஏகஇந்தியா, என்ற தத்துவத்தைத் தாரகமாகக் கொள்ள வேண்டும் என்று இங்கு 'பிரசங்கம்' செய்பவர்களின்மீது நினைவு சென்றது எனக்கு, இந்தச் செய்தியைப் படித்தபோது.

ஏய்த்துப் பிழைப்பவர்கள் ஏமாளிச் சிறுவர்களைப் பிச்சைக்காரர்களாக்கி, பணம் பறிக்கிறார்கள்.

பதவிக்குப் பல்லிளிப்போரை, பசப்பிடத் தெரிந்த வடநாட்டுத் தலைவர்கள், மந்திரி வேஷம்போடச் செய்து, தொண்டரடிப்பொடி ஆழ்வார்களாக்கி, திராவிடத்திலே 'பஜனை' செய்யச் சொல்கிறார்கள்.

இங்கே வரி வசூலித்துத் தருகிறார்கள் — பஜனையும் நடத்துகிறார்கள்—பாதி தேங்காய் மூடியும் ஒரு பிடி சுண்டலும் கொஞ்சம் வெண் பொங்கலும் கிடைக்கிறது—உண்டு உருசி உருசி! என்று கூவி ஆனந்தத் தாண்டவமாடுகிறார்கள் இந்த அடிவருடிகள். இவர்களின் இனத்தவர், திராவிடர், வெளிநாடு சென்றுவது வாழ்வு நடாத்துவோம் என்று கடல்கடந்து சென்றும், வறுமையையே கண்டு வேதனைப் படுகிறார்கள், அவர்கள் சார்பாக வாதாடவும் வகையற்றுக் கிடக்கிறார்கள்—அதேபோது, வெளிநாடுகளிலே வியாபாரக் கோமான்களாகி வடவர் கொழுக்கிறார்கள்—வெளிநாடு சென்றுள்ளவர்களின் சீர் சிதையாதிருக்க பாதுகாப்புத் தேடப்படுகிறது, ஆறடுக்குப் பவனம் கட்டப்படுகிறது.

அங்கே பவனம்!

இங்கே?

தம்பி, அழகேசர்களின் கவனமெல்லாம், தங்களுக்கு அடுத்த முறை என்ன பதவி கிடைக்கும் என்று ஆரூடம் பார்ப்பதிலும் நேருவின் தயவைப் பெற்றால் எங்காவது ஒரு ராஜபவனத்தில் கொலுவிருக்கும் பாக்யம் கிடைக்குமே என்று ஏங்கிக்கிடப்பதிலும்தான் செல்லும். அவர்கள், ஏன் வடநாடு தென்னாடு என்று பேசுவது பேதமை என்று கூறுகிறார்கள் என்ற சூட்சமம் மக்களுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது; எனவே, அவர்களின் பேச்சுப்பற்றிக் கவலைப்படாமல், நீ, வடநாட்டவர்கள் பவனங்களில் வாழ்வதை எடுத்துக்காட்டி, இது நியாயமா, ஏன் இதனை அனுமதிக்கவேண்டும், எத்தனை காலத்துக்கு இதைச் சகித்துக் கொள்ள முடியும், நமக்கென்று ஓர் நாடு இல்லையா, அது ஏன் அன்னியரின் வேட்டைக்காடாகி இருக்கிறது என்று கேட்டுக்கேட்டு அவர்களின் முகம் கேள்விக்குறியாக மாறும்படி செய்! தம்பி! பிறகு பார், இந்த அழகேசர்களின் நிலையை! ஆப்பசைத்த மந்தி கதை தெரியுமல்லவா—சிறுவனாக இருக்கும்போது சொல்வார்களே—அந்த நிலைதான்.

அங்கே பவனம், தம்பி, இங்கே படகுப் பயணம்.

அங்கே ஆறு அடுக்கு மாளிகை. இங்கே சேரி.

இதை எடுத்துக்காட்டு, தம்பி, நித்த நித்தம் எடுத்துக்காட்டு

## ஐந்தாண்டுத் திட்டம்!

*

### பச்சோந்திகளுக்கு!!

**முதலாண்டு:-** கழகங்களில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்து, காங்கிரசைக் கண்டித்தும், பார்ப்பனரைக் கண்டித்தும் பேசுவது.

**இரண்டாமாண்டு:-** கழகப்போக்கு சரியில்லை, பார்ப்பனரைக்கண்டிப்பது வகுப்புவாதம் என்று அறிக்கைவிடுவது.

**மூன்றாமாண்டு:-** கழகத்திலிருந்து விலகிய வீரரின் விரிவுரை, விளக்க உரை என்று பேசி உலாவருவது.

**நாலாமாண்டு:-** காங்கிரஸ் கமிட்டியில் தேர்தலுக்குநிற்பதற்கான மனு தருவது.

**ஐந்தாமாண்டு;-** காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தப்படாததால், வெட்கமும் வேதனையும் கொண்டு முக்காடிட்டுக் கொள்வது.

—தவி.

தொடுக்கப்படும் தூற்றல் கணைகளைத் துச்சமென்று எண்ணி, தூய உள்ளத்துடன் தாயக விடுதலைக்கான தன்னிகரற்ற தொண்டாற்றிக் கொண்டிரு, பிறகு பார், நாட்டிலே புதியதோர் பொலிவு பூத்திடுவதை; உன் பணியினால், நம் நாடு பொன்னாடு ஆகத்தான் போகிறது. ஒப்பற்ற பணியிலே தம்பி, நாம் ஈடுபட்டிருக்கிறோம்; உன் அருந்திறனை நம்பித்தான், மார்தட்டி நின்று மாற்றாரிடம் சொல்லி வருகிறேன், திராவிட நாடு திராவிடருக்கே என்று.

அன்புள்ள,

**அண்ணாத்துரை.**

# ஈ, கேட்கிறது!

மலரிலும் இருப்பேன்! மலத்திலும் கிடப்பேன்! மாளிகையில் நுழைவேன் மண் குடிசையிலும் வசிப்பேன்! கோபுர உச்சியிலும் காணப்படுவேன், குப்பைமேட்டிலும் குடி இருப்பேன்! தேனூறும் பழத்தில் என்னைப் பார்க்கலாம், சீழ் வடியும் புண்ணிலும் நான் இருப்பேன்! நான் யார், பெயர் என்ன கூறுங்கள் பார்க்கலாம்! ஹே! ஹே!! தெரியவில்லை? இவ்வளவு தானா உங்கள் தெளிவு? இது கூடவா தெரியவில்லை?

சரி! இது தெரிகிறதா, பாருங்கள். எந்தக் கட்சியிலும் இருப்பார்! எந்தக் கட்சிதான் என்னை நாடவில்லை என்று பெருமிதத்துடன் கேட்பார்! காங்கிரசை எதிர்ப்பார், காங்கிரஸ் மந்திரியையும் ஆதரிப்பார்! குல முன்னேற்றமே என் மூச்சு என்பார், குலமுன்னேற்றம் குலையும்படி தலைவர்கள் காங்கிரசுடன் கூடிக் குலவுவதையும் ஆதரித்துப் பேசுவார்; திராவிட நாடு தேவைதான் என்று மார்தட்டிப் பேசவும் முடியும், அப்படி ஒரு திட்டமா? என்று பரிகாசம் பேசவும் முடியும்; இவர் யார்? பெயர், என்ன, தெரிகிறதா? இதுவும் தெரியவில்லையா! செச்சேச்சே! இவ்வளவுதானா!

முல்லைக்கொடி படரவும் உதவும், பிணம் கொண்டுசெல்லப்படுவதற்கும் தேவைப்படும், மாடு ஓட்டும் கோலுமாகும்—மஞ்சள் குங்குமம் பூசிவிட்டால் மந்திரக் கோலுமாகும்—மண அறையிலும் இருக்கும் மாரடித்தழும் இல்லத்திலும் காணப்படும்—இது தெரிகிறதா? இல்லையா! அடாடா, என்னதான் தெரியும் உங்களுக்கு. இது மூங்கிலய்யா, மூங்கில். தோட்டத்திலேயும் பார்க்கிறீர்கள், சுடுகாட்டுக்குச் சுமையைத் தாங்கிக்கொண்டு போவதையும் காண்கிறீர்கள். மூங்கில், இப்படி, எந்தக் காரியத்துக்கும் தேவைப்படுகிறதல்லவா; எங்கும் காணப்படுகிறதல்லவா, அது போன்ற பெருமை எனக்கும் உண்டு, இரண்டாவதாகக் குறிப்பிட்டேனே அவருக்கும் உண்டு.

நான்தான், ஈ!

அவர் ஒரு M. L. A.!

எவ்வளவு ஓரவஞ்சனை பாருங்கள் உலகத்துக்கு. மணம் தரும் மலரானாலென்ன, நாற்றமடிக்கும் நரகலானாலென்ன மதுரமானபழமானாலென்ன, சீழ்வழியும் புண்ணானாலென்ன, என்று, பேதம் பாராட்டாமல், எங்கும் செல்கிறேன், உறவாடுகிறேன்—இந்த உத்தம குணம் படைத்த என்னை விரட்டுகிறீர்கள்—இதே குணத்தைக் கொண்டு எந்த அரசியல் கட்சியுடனும் நான் உறவாடுவேன், எந்த அரசியல் கட்சிதான் என்னை நாடாமலிருக்கிறது என்று தத்துவம் பேசுகிறார் துணிவுடன் ஒருவர், அவரை M.L A. ஆக்கிப் பெருமைப்படுத்துகிறீர்கள்! நான் கேவலம் ஈ—! அவரோ, சட்டசபையிலே உறுப்பினர்! எனக்கு மலரும் மலமும் ஒன்றுதான்—அவ்வளவு பற்றற்ற தன்மை, பரிபக்குவம் இருக்கிறது—அவரும் அப்படித்தான், எந்தச் சமயத்தில் எந்த அரசியல் கட்சியுடன் உறவாடுவார், எதனை ஏசுவார், என்று யாரும் கூற முடியாது, அவ்வளவு விரைவாகவும் விமரிசையாகவும் தமது தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வார்-அதுபற்றிப் பெருமையாகவும் பேசிக்கொள்வார், அவர் உங்கள் இனம், மனிதகுலம் என்ற காரணத்துக்காக, அவரை, M.L.A. ஆக்கி மகிழவைக்கிறீர்கள்! ஐயன்மீர்! அவர், உருவில் உங்களைப்போலத்தான் இருக்கிறார்—மனிதராக! ஆனால் உள்ளப்பாங்கு, எனக்கு இருப்பது போன்றது! பறந்தபடி இருப்பவர் மலரிலிருந்து மலத்துக்கு, மலத்திலிருந்து பழத்துக்கு அங்கிருந்து புழுத்துக் கிடக்கும் இடத்துக்கு — ஏன் என்று கேட்டாலோ, மூக்கில் நுழைந்துவிடுவேன் கண்ணில் தாக்குதல் நடத்துவேன், என்று மிரட்டவும் செய்வார்! அப்படிப்பட்டவரை, M.L.A. என்கிறீர்கள்!! என்னையோ விரட்டுகிறீர்கள்!

நான் கேவலம், ஈ.

என்னால்தான் நோய் பரவுகிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். உருவில் உங்களைப்போலவும் குணத்தில் என்னைப்போலவும் இருக்கிறாரே, அவர் பொதுவாழ்வுக்கு நோயூட்டும் கிருமிதானே—என்ன செய்தீர்கள்? என்னசெய்ய முடிகிறது!

என்னை ஒழிக்க, பினாயில் என்கிறீர்கள், டி—டி—டி—என்கிறீர்கள் சாக்கடைகளைத் திருத்த திட்டம் என்கிறீர்கள்—என் குணம்கொண்ட M.L.A.க்களின் மூலம், பொது வாழ்வுத் துறையிலே மூண்டுவிடும் நோயைப் போக்க, என்ன மருந்திருக்கிறது, முறையிருக்கிறது!

'ஜம்மென்று' அவர் தமது தர்பாரை நடத்திக்கொண்டிருக்கிறார்!

அரிது, அரிது, மானிடராய்ப் பிறத்தலரிது, என்று சான்றோர் சொன்னது, முழுக்கமுழுக்கச் சரியாகத்தான் இருக்கிறது.

நான் ஈ என்ற காரணத்தால், கேவலப்படுத்தப்படுகிறேன்!

என் 'குணமே' கொண்டவர், மனிதர் என்பதற்காக, என்னைப் போல் கேவலத்துக்கு ஆளாக்கப் படவில்லை—மாறாக, அவர் உங்களையே, கேவலமாகப் பேசுகிறார்!!

★

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

[பேராசிரியர் இருதயராஜ்]

சமுதாயத்தில் நிலத்திலும் முதலீட்டிலும் தனிச் சொத்துரிமை இருப்பதை நீக்கி, உடைமைகளையெல்லாம் பொதுவாக்குவது என்ற மார்க்ஸின் இலட்சியத்தை எப்படி அடைவது என்பதைப் பற்றி அவருடைய காலத்துக்குப்பின் மாறுபட்ட அபிப்ராயங்கள் தோன்றின.

பொது உடைமை உடனடியாக பலாத்கார புரட்சியின் மூலம் தான் சாதிக்க வேண்டும் என்று சொல்பவர்கள் ஒரு புறமும், இந்தக் குறிக்கோளை அடையப் புரட்சி தேவையில்லை, இப்பொழுது இருக்கின்ற ஜனநாயக அமைப்புகளின் உதவியைக் கொண்டே, சாத்மீக முறையில், சாவதானமாக சீர்திருத்தங்களின் மூலம் அதை அடைய வேண்டும் என்று கூறுபவர்கள் மற்றொரு புறம் — ஆக மார்க்சை பின்பற்றும் சமதர்மவாதிகளிடையே இன்று இந்த இரண்டு விதமான கருத்துக்களும் காணப்படுகின்றன.

நாளடைவில், நிதானமாகப் பொது உடைமை இலட்சியத்தை அடைய வேண்டும் என்ற முறையைப் பின்பற்றியவர்ச்ள் பிரிட்டனில்தான் அதிகம். அவர்கள் பேபியன் சோஷலிஸ்டுகள் எனப்படுவார்கள்.

ரோம ராஜ்யம் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்த காலத்தில் இதாலி நாட்டை ஹனிபால் என்ற கார்த்தேஜீவியத் தளபதி கைப்பற்றும் நோக்கத்துடன் படையெடுத்து வந்தான். அப்பொழுது ரோமில் ஹனிபாலை எதிர்ப்பதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேபியஸ் மாக்ஸியஸ் என்பவர் ஹனிபாலை தோற்கடிப்பதற்கு ஒரு நூதன முறையைக் கையாண்டார். நேரடியாகக் ஹனிபாலின் சேனையைச் சந்தித்து அதைத்தோற்கடிப்பது எளிதல்ல; அப்படி சந்தித்துத் தோற்று விட்டால் இத்தாலி நாட்டில் பல பகுதியினர் ரோமருடைய பலத்தில் நம்பிக்கைக் குன்றி வெற்றி பெறும் எதிரியுடன் சேர்ந்து கொள்வார்கள் என்று கருதி நேரடியாக போர் செய்வதற்குசந்தர்ப்பம் ஏற்படாமல் எதிரியை அலைக்கழித்து இங்கு அங்குமாக அலையவிட்டுக் கடைசியில் அவர்கள் சோர்ந்து போன நேரத்தில் ரோம சைன்யத்தை ஏவிவிட்டு நேரடியாகத் தாக்கச் செய்து ஹனிபாலின் சேனையை முறியடிக்கலாம் என்பதே பேபியன் திட்டமிட்டது. இதைத்தான் பேபியன் போர் முறை என்று கூறுவார்கள்.

பிரிட்டிஷ் சோஷலிஸ்டுகள் வர்க்கப் போரை வலுவடையச் செய்யாமல், புரட்சிக்கு இடங் கொடுக்காமல், இருக்கின்ற ஜனநாயக அமைப்புகளை வைத்துக் கொண்டே சட்டரீதியாக நாளடைவில் சாவதானமாக பொது உடைமை இலட்சியததை அடையலாம் என்ற நிதான முறையைக் கையாளுவதால் அவர்களை பேபியன் சோஷலிஸ்டுகள் என்று அழைக்கின்றனர்.

*1884*—ம் ஆண்டு பிரிட்டனில் பேபியன் சங்கம் நிறுவப்பட்டது. பெர்னாட்ஷா, ராம்சே மாக்னால்டு போன்றவர்கள் ஆதியிலேயே அதன் அங்கத்தினரானார்கள்.

ஒன்றுக்கும் உதவாத ஒரு நிலம். காடாய்க் கிடக்கிறது. வாங்குவாரில்லை, அதனால் விலை போகாத நிலை. எப்படியோ ஒரு நீர்ப்பாசனத் திட்டம் உருவாகிறது. விவசாயத்திற்கு தண்ணீர் தேவைக்கு மேல் கிடைக்க வழி பிறக்கிறது. விவசாயம் ஆரம்பமாகிறது. காடு களமாகிறது. கரம்பு நிலம் வயலாகிறது. காளானும் கள்ளியும் முளைந்த இடம் கண்ணைக் கவரும் பசும் பயிர் விளையும் நிலமாக மாறுகிறது. அதை வாங்க முன் வருகிறார்கள் பலர். விலை மதிப்பு விஷம் போல் ஏறுகிறது. பயன் இன்றிக் கிடந்த இடம் நல்ல பயன் தரும் பூமியாகிறது. அதன் சொந்தக்காரன் பணக்காரனாகிறான். அவனுடைய நிலை மாறுவதற்கு, அவனிடம் செல்வம் சேர்வதற்கு அவன் பொறுப்பாளியல்ல. அவனுடைய எந்த முயற்சியாலோ அவனுடைய நிலம் வளமாகவில்லை. சிரமப்படாதவன் செல்வவானாகிறான். அதற்குக் காரணம் சமூகம்தான். சமூகத்தை ஆளும்,அரசாங்கம் நீர்ப்பாசனத் திட்டத்தை நிறைவேற்றியது. அதனால் தனி ஒருவன் பயனடைகிறான். உயர்கிறான். காரணம், சமூகம் அவன் உயர்வதற்குண்டான சூழ் நிலையை ஏற்படுத்தியது தான். சிறியதொரு நகரம். அதில் ஜனத்தொகைகுறைவு. அதிர்ஷ்டவசமாக அந்நகரத்தின் பக்கத்திலேயே நிலக்கரி சுரங்கம் ஒன்று கண்டு பிடிக்கப்படுகிறது. ஆயிரக் கணக்கான சுரங்கத் தொழிலாளர்கள் அங்கு குடியேறுகின்றனர். நிலக்கரியை உபயோகிக்கும் பல தொழிற்சாலைகள் சுரங்கத்துக்கருகாமையிலேயே கட்டப்படுகின்றன. மேலும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் குடியேறுகின்றனர். சிறியநகரம் பிரமாண்டமானதொரு நகரமாகிறது. அதில் இருக்கும் வீடுகளுக்கு கிராக்கி ஏற்பட்டு வாடகை உயருகிறது. புது வீடுகள் கட்டுவதற்கு மனைகள் வாங்கப்படுகின்றன. மனைகட்டுகளின் விலை பன்மடங்கு ஏறுகிறது. கட்டிட வேலைகள் அதிகமாகவே கட்டிட சாமான்களின் விலையும் ஏறி, அதனால் அந்த சாமான்களை விற்கும் வியாபாரிகளின் லாபமும் பெருகுகிறது. இவ்வளவு பேரும் எதிர்பாராத விதத்தில் அதிக லாபம் அடைவது அவர்களுடைய சொந்த முயற்சியால் சிறிதளவும் இல்லை—சமூகமோ, அரசாங்கமோ அந்த நிலக்கரிச் சுரங்க வேலையை ஆரம்பித்திராவிட்டால், அந்தப் புதிய சூழ் நிலையை ஏற்படுத்தியிராவிட்டால், இவர்களெல்லாம் திடீரென்று திரவியம் சேர்த்திருக்க முடியாது.

இப்படித்தான் சமூக வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களால், சிலரிடம் செல்வம் போய் சேருகிறது. அவர்களுடைய சொத்துக்களுடைய விலைமதிப்பு ஏறுவது அவர்களுடைய முயற்சியால் அல்ல—சமூகத்தால். இருந்தும் அவர்கள் அடையும் லாபத்தில் ஒரு பங்கு கூட சமூகத்திற்குச் சேர்வதில்லை.

சந்தர்ப்பத்தால் சிலர் செல்வம் சேர்க்கிறார்கள். அந்தச் சந்தர்ப்பம் சமூகத்தால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. ஆனால் அதன் விளை

வாக கிடைக்கும் லாபத்தில், சமூகத்திற்கு பங்கு கிடையாது.

செல்வத்தில் புரளுபவர்கள் எல்லோருடைய வரலாற்றைப் பார்த்தாலுமே அவர்களுடைய காலத்திலோ அல்லது அவர்களுடைய முன்னோர்களுடைய காலத்திலோ ஏதாவது ஒரு சமயத்தில், சமூகம் ஏற்படுத்திக் கொடுத்த சந்தர்ப்பங்களின் பயனாகத்தான் அவர்களுக்கு அல்லது அவர்களுடைய குடும்பத்துக்கு சொத்து சேர்ந்திருக்கும், என்பதைக் காணலாம்.

ஆகவே பேபியன் சோஷலிஸ்டுகள், 'சொத்துக்கள் சேருவதற்கு காரணமாகயிருக்கும் சமூகமே அந்த சொத்துக்களை சொந்த மாக்கிக்கொண்டு அவைகளை நிர்வகித்தால்: மக்களுக்குள்ளே அவர்களுடைய வருமானத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கிவிட முடியும்' என்ற முடிவுக்கு வந்தார்கள்.

வேலை கொடுத்து ஊதியம் தரும் முதலாளிகள் ஒரு புறம், தொழிலாளர்கள் மறுபுறம் இவர்களிடையே அல்ல உண்மையான போராட்டம். சமூகத்திற்கும், சமூகத்தால் பயனடைந்து முதலாளிகள் ஆனவர்களுக்குமிடையேதான் உண்மையான போராட்டம்.

சொத்து சேர்வது சமூகம் ஏற்படுத்தும்சூழ்நிலையால். ஆகவே அந்தச்சொத்துமுழுவதும் சமூகத்துக்கு ச்சொந்தமாகவேண்டும். அப்பொழுதுதான் சமூகத்தால் கிடைக்கும் சொத்தில் சமூகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் பங்கு கிடைக்கும்.

இதுவரை நியாயமாக சமூகத்துக்குச் சேரவேண்டியதைத் தராமல் தங்களுக்கு மட்டுமாக வைத்துக்கொண்டவர்கள்தான் இன்று நிலம், தொழிற்சாலை, சுரங்கம் போன்ற வருமானம் தரக்கூடிய உற்பத்தி சாதனங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள். அவர்களிடமிருந்து இந்த சாதனங்களைப் பறிமுதல் செய்து, சமூகம் கைப்பற்றவேண்டும். அதன்பின் சமூகத்தின் பிரதிநிதித்துவம் கொண்ட அதன் கருவியான அரசாங்கம் அவைகளை வைத்து நிர்வகிக்க வேண்டும்.

ஆனால் ஒரேயடியாக எல்லா தொழில் உற்பத்தி ஸ்தாபனங்களையும் எடுத்து நடத்துவதென்றால் சிரமமானது. ஆகவே முதலில் பொதுமக்களுடைய நலனை அதிகம் பாதிக்கும், ரயில்வே, சுரங்கங்கள், பஸ்போக்குவரத்து—முதலியவைகளையும் பிறகு ஒன்றன்பின் ஒன்றாய் மற்ற தனிப்பட்டவர் நடத்தும் தொழில்களையும் அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டும் என்று பேபியன்கள் கூறுகின்றனர்.

இப்படிச் செய்தால் சொத்துக்காரர்களுடைய தொகை குறையும், ஏற்றத்தாழ்வுகள் சமூகத்தில் மறையும். தொழில் வளர்ச்சி, சமூக முன்னேற்றத்தால் ஏற்படும் சந்தர்ப்பங்கள் இவைகளால் ஏற்படும் உற்பத்திப் பெருக்கம், செல்வப் பெருக்கம் இவைகளில் சமூகத்தில் வாழும் எல்லோரும் பங்கடைய ஏதுவாகும். எல்லோரும் பொருளாதாரத் துறையில் வளமாக வாழ முடியும்.

இந்த முயற்சி வெற்றிபெற பேபியன்கள் தீட்டிய திட்டம் திறமையானது. மக்களுடைய சொத்தையெல்லாம் நிர்வகிக்கும் பொறுப்பையுடைய அரசாங்கம் பூரண பிரதிநிதித்துவம்வாய்ந்ததாயிருக்க வேண்டும். எவ்வளவு அதிகமான பேருக்கு வாக்குரிமை அளிக்க முடியுமோ அவ்வளவு பேருக்கு அளிக்கவேண்டும். அரசாங்க அலுவல்களைப் பார்க்கும் பொறுப்புடையவர்கள் அதற்குரிய நல்ல பயிற்சியுடையவர்களாயிருக்க வேண்டும். எனவே எல்லா மக்களுக்கும் கல்வி கற்க சமசந்தர்ப்பங்கள் அளிக்கவேண்டும். மேலும் அதிகாரம் ஓரிடத்தில் குவிந்திராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகமான அதிகாரங்களை அளித்து ஆங்காங்குள்ள மக்களுடையகுறைகள் தேவைகள் கவனிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்து மத்திய அரசாங்கம் மேற்பார்வை செய்யும் வேலையை மட்டும் கவனித்துக் கொள்ளச் செய்யவேண்டும். இதுவே பேபியன்களுடைய அடிப்படை திட்டம்.

அதன்பின் மக்களின் நிலையை சீர்படுத்தவும் உயர்த்தவும் ஆவன செய்யவேண்டும். தொழிற்சாலைகளில் உழைக்கும் நேரத்தை கட்டுப்படுத்தல், வேலையிழந்தவருக்கும், வேலையே கிடைக்காதவருக்கும் வருமானமில்லாத காலத்தில் பாதுகாப்பு, குறிப்பிட்ட ஓரளவுக்குக் குறையாத கூலி நிர்ணயம், எல்லோருக்கும் குறைந்த அளவுக்காவது நோய், பிணிகள் அண்டாதபடி பாதுகாப்பு, எல்லோருக்கும் கல்வி பயில வசதிகள் — இவைகளையெல்லாம் அரசாங்கம் செய்துதரவேண்டும்.

பொதுமக்களின் நலனை அதிகமாகப் பாதிக்கும் தொழில்களை அரசாங்கம், மத்திய அரசாங்கமாகிலும், ஸ்தல ஸ்தாபனமாகிலும் எடுத்து நடத்துவது — இயற்கையிலேயே கிடைப்பதற்கரிய பொருள்களை உற்பத்தி செய்வதோ அல்லது விற்பதோ தனிப்பட்ட ஒருவருடைய ஏகபோக உரிமையாகி விடாமல் அரசாங்கமே அதைப் பார்த்துக்கொள்வது, முதலீட்டுகளையும், அபரிமிதமான குத்தகைகளையும், வாடகை வருவாயையும் அதிக வரி விதித்துக் கட்டுப்படுத்துவது பரம்பரைச் சொத்துக்களின்மேல் வரி விதிப்பது — இவ்வித முறைகளால் சமூகத்திலிருக்கும் ஏற்றத்தாழ்வுகளை, சொத்து, வருமானம் ஆகிய இவைகளில் சமூகத்தில் காணப்படும் மேடுபள்ளங்களை நிரவிவிட்டு நாளடைவில் எல்லோரிடையேயும் ஒருவித சமத்துவம் ஏற்பட வழிசெய்யவேண்டும் என்கிறார்கள் பேபியன் சமதர்மவாதிகள்.

(தொடரும்)

## ஐந்தாண்டுத் திட்டம்!

*

### முதலாளிக்கு!!

முதலாண்டு:- யாராவது ஒரு மந்திரிக்கு விருந்தளிப்பது, கதர் ஆடைகளை வாங்குவது; கோசாலைகளுக்கும் காங்கிரஸ் நிதிகளுக்கும் தாராளமாக நன்கொடை தருவது; எவ்வளவு சாதாரணமான அளவாக இருந்தாலும் பரவாயில்லை என்று ஏதேனும் ஓர் சர்க்கார் காண்ட்ராக்ட் பெறுவது.

இரண்டாமாண்டு:- கன்ட்ரோல் இல்லாத ஏதாவது பண்டத்துக்கான 'கோட்டா' பெறுவது.

மூன்றாமாண்டு:- ஏற்றுமதிக்கோ இறக்குமதிக்கோ பர்மிட் பெறுவது—இலாபம் சம்பாதிப்பது.

நாலாமாண்டு:- அன்னிய முதலாளியின் கூட்டுறவுடன் ஏதேனும் ஒரு தொழில் துவக்குவது.

ஐந்தாமாண்டு:- பெரிய, தொழிலதிபர் வியாபார வித்தகர் என்ற 'ஹோதாவில்' சர்க்காருடைய திட்டக் கமிட்டியில் இடம் பெற்று, நாட்டுப் பொருளாதார திட்டத்தைத் தீட்டும் உரிமை பெற்றுவிடுவது!

—அப்பாஸ்

2-பக்கத் தொடர்ச்சி

யம்னு சொல்றது! மேலும், டாடா, பிர்லா போன்ற கோடீஸ்வராளெல்லாம், டி. டி. கேயின் அத்யந்த நண்பர்களாம்! டி. டி. கேயை காங்கிரஸ் வட்டாரத்திலே குறைவாப் பேசினு, அவாளுக்குப் பிரமாதமானகோபம்வந்துவிடறதாம். நேரு, டி. டி. கே. யிடம் ஒரு வகையிலே பயபக்தி விசுவாசத்தோடு நடந்து கொள்றதுக்கும் இதுதான் முக்கியமான காரணம்னு, சொல்ரு......

சு:- யார்...?

ரா:- ஏன். என் மருமான் கூடத் தான் சொல்ருன்......

சு:- எந்த மருமான் ஓய்!

ரா:- டில்லி செகரிடெரியட்டிலே வேலை பார்க்கிருனே, அவன் தான், நம்ம நரசிம்மன்.

சு: இப்ப என்ன ஓய் சம்பளம்?

ரா:- ஆறு நூறு தர்ரா...

சு:- மேல் வரும்படி?

ரா:- சரிதான் ஓய்! ஏன், அவனையும் உள்ளே தள்ளவேணும் என்கிறீரா!

சு:- சும்மா இரும் ஓய்! கையை நீட்டறவா, எல்லோருமே ஜெயிலுக்கா போரு? என்னமோ சிலபேரோட ஜாதகம் அவாளை வம்பிலே கொண்டுபோய் தள்ளிவிடறது....

ரா:- போதும் ஓய், பகவான் நமக்கு ஒரு குறையும் வைக்கல்லே.... ஆறுநூறு போதும்... அடுத்த மாதம், ஒரு பிளான் போட்டிருக்கேன், அது பலிச்சுதானு ஆயிரமா, உயரலாம், பிராப்தம் எப்படின்னு தெரியல்லே..

சு:- என்ன 'பிளான்.' ஓய்! நேக்குச் சொல்லப்படாதோ......

ரா:- சொல்லலாம், ஆனு, உம்ம வாய், உளறுவாயாச்சே....... நம்ம ஜெயந்தி இருக்கா பாருங்கோ, அவளோட பரத நாட்டியம் ஏற்பாடாறது அடுத்த மாசம், நானும்கூடப் போறதாக இருக்கறேன்....... அவ்வளவு சொன்னு போதுமேன்னே.........

சு:- இன்னும் ஸ்பஷ்டமாச் சொல்லனுமா..........பேஷ்! பேஷ்! ஆயிரம் என்ன, என்ன கேட்டாலும் நடக்கும்........உமக்கு பந்துதானே, ஜெயந்தி......

ரா:- இனி பந்து ஆகவேண்டியது தான்......உம்ம மனசோட போட்டுவையும், இன்னும் ஒரு ஐந்து பத்துலகாரம் சம்பாதிச்சானதும், நேக்கு மாட்டுப் பொண்ணுகப்போரு.......

சு:- அப்படியா! அடிசக்கேன்னும்!

ரா:- ஏதோ, பகவானுடை அனுக்ரஹம்! நம்மாலே, என்ன இருக்கு......

சு:- பையன், டாக்டர்தானே!

ரா:- டாக்டர்னு பட்டம் இருக்கு ஓய்! அப்படின்னு. வைத்யத் தொழில்னு எண்ணிண்டீரா! அவன், டாக்டர் ஆப்பிலாசபி, அதாவது வேதாந்த சிரோமணிப்பட்டம் பெற்றிருக்கான்.........

சு:- அப்ப, உபஜனுதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் போலன்னு சொல்லும்......

ரா:- அவர் எங்கே! இந்தப்பய எங்கே! சிட்டுக்குருவி ராஜாளி இரண்டும் ஒண்ணுகிவிடுமோ ஓய்!

சு:- ஏன் ஓய், சிட்டுக்குருவின்னு சொல்றீர்-குட்டி ராஜாளின்னு சொல்லும்......

ரா:- ஏதோ, உம்மோட ஆசிர்வாதம் அப்படியே நடக்கட்டும்......

★

# ★ சேதுபந்தனம் ★

'அரியும் சிவனும் ஒன்று' எனும் அவசியமான உண்மையை அறிவிப்பதற்காகவே, தில்லையில் ஒரு பக்கம் நடராசரும் இன்னொரு பக்கம் கோவிந்தராஜரும் எழுந்தருளியிருப்பதாக, கும்பாபிஷேகப் பிரசங்கம் செய்த திருவாளர் சேதுப்பிள்ளை சொன்னுராம்! அந்த உயரிய தத்துவத்தை ஏற்று, நடராசனுக்கு வெள்ளிக் கதவுகள் போட்ட தீட்சிதர்கள் யாரும் பெருமாளுக்கும் போட்டுத் தந்ததாகத் தகவல் இல்லை! இன்னுமொன்று, சேது போன்ற-டில்லியால் பரராட்டப் பெறும் பாக்யசாலிகள்—இதுபோன்ற விஷயங்களைப் பேசும்போது, பல உண்மைகளை மறந்துவிடுகிருர்கள். அரியும்சிவனும்ஒன்று என்ருரே அந்த அரி, சிவனுக்கு அருகில் இருக்கக் கூடாதென்பதற்காக, 'அன்பே சிவம்' எனும் பெரியவர்களால் எத்தனையோ தடவைகள், அலைக்கழிக்கப்பட்டதாக, பிற்காலச் சோழர்கள் சரித்திரத்தில் அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் சொல்லுகிருர். தீட்சதர்கள், அரியின் கோயிலையே இடித்தனராம்! எங்கே, சோழனின் சைவம் அரியின் சிலையையே தூள் தூளாக்கிவிடுமோ என்ற பயத்தில் வைணவ மதாசாரியார் ராமானுஜர் திருட்டுத்தனமாக சிலையை எடுத்துக்கொண்டோடி திருப்பதி கோயிலைக் கட்டினுராம். பிற்பாடு வந்த, விஜயநகர வேந்தர்களால், ஏதோ இடமும் கோயிலும் ஏற்பட்டதாம் சிதம்பரத்து அரிக்கு! இது, வரலாறு. ஆனுல், நமது தமிழ்ப் புலவர் சேது, 'அரியும் அரனும் ஒன்று' என்கிருர். பாவம், அவரது ஆசை, அதுவோ! அல்லது அப்படிப் பேசுதலே அழகென எண்ணினுரோ!! பேசினுர் — புராண மதங்களின் மீது மக்களுக்கு ஏற்பட்டுவரும் வெறுப்புணர்ச்சியால் கிலிகொண்டவர்கள் இப்போது பொதுவாகச் சர்வமத சம்மதம் என்ற சித்தாந்தத்தையும் சிறப்பாக, சைவ-வைணவ சமரச போதத்தையும் செய்து வருகிருர்கள். பெயருக்கேற்றபடி புலவர் பாலம் கட்டுகிருர் பாசத்தோடு—சேது பந்தனம்!!

★

## ஐந்தாண்டுத் திட்டம்!

★

### சீமாட்டிகளுக்கு!!

முதலாண்டு:- மாதர் மாநாட்டில் கலந்து கொள்வது.

இரண்டாமாண்டு:- மாதர் மலர் இதழில் போட்டோ வெளிவரச் செய்துகொள்வது.

மூன்ருமாண்டு:- ஆதரவற்ற பூனைகளின் பராமரிப்பு போன்ற ஏதேனும் ஓர் தர்ம காரியம் துவக்குவது.

நாலாமாண்டு:- அகில உலக, விவாக விடுதலையான மாதர்கள், விதவைகள், மாநாடு நடத்துவது.

ஐந்தாமாண்டு:- சர்வதேச மாநாடுகளுக்குப் பிரதிநிதியாகி, சர்க்கார் செலவில், பாரிஸ் போன்ற உல்லாசபுரிகள் சென்று 'குஷி'யாக இருப்பது!

—அப்பாஸ்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டாய பாடமாக்கினாலும், ஏன் என்று கேட்பவர்களோ எதிர்ப்பு நடத்துபவர்களோ கிடையாது என்றும் டில்லிக்கு ஒரு அசைக்கமுடியாத நம்பிக்கை ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

கனிவுடன் கூறுகிறார் காமராஜர், இந்தி விஷயமாக அவசரப்படேல் என்று, இந்திக்கு என்ன யோக்யதை இருக்கிறது என்றே கேட்கிறார் ஆச்சாரியார், இருபத்தைந்தாண்டுக் காலம் 'கெடு' தாருங்கள் என்று டி. டி. கே. அறிவுரை தருகிறார், மித்திரன் இந்தி வெறியரின் போக்கை இடித்துரைத்துக் கண்டிக்கிறது, கல்கியும் விகடனும், கம்யூனிஸ்டும் பிரஜாவும், ஒவ்வோர் வகையான 'பாணியில்' இந்தி நுழைப்புபற்றி கசப்பையும் கோபத்தையும் கொட்டியுள்ளன. எனினும், போட்ட திட்டத்தின்படி காரியம் நடந்தே தீரும், பதினைந்து ஆண்டுக்காலத்திலே இந்தி பட்டம் ஏறியாகவேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டு, அது குறித்துத் தீவிரமாகவே டில்லி, வேலையில் இறங்கிவிட்டது.

இந்திக்கு இடி பல்வேறு பக்கங்களிலிருந்தும் கிளம்பியுமா இந்த ஆணவப்போக்கு என்று கேட்கத் தோன்றுகிறது.

மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், இந்தி திணிப்பை ஆச்சாரியாரும், காமராஜரும், டி. டி. கேயும் சுப்ரமணியனாரும், மித்திரனும் பிறவும் கண்டிப்பது தெரியும்—கலிபுட்டும் அளவுக்குக்கூட. ஆனால் இந்த எதிர்ப்புகள் அவ்வளவும், இந்தியை எப்படி புகுத்துவது என்பது பற்றியதே தவிற, ஏன் இந்தி? என்பது பற்றி அல்ல! ஏக இந்தியா—அதற்கோர் தேசிய மொழி—அம்மொழி இந்தி—என்ற மூன்று கொள்கைகளையும் ஏற்றுக் கொண்டு, கன்னம் வைப்பதா, கதவின் தாளைப் பெயர்ப்பதா, நடுநிசியிலா, வெள்ளி கிளம்பும்போதா, கண்ணில் துணித்திரையுடனா, உடலில் கரிபூசிக்கொண்டா என்று கள்ளர்கள் தமக்குள் முறைபற்றிப் பேசிக்கொள்வதில் சிறு கலாம் விளைவதுபோல. இருபதாண்டா பதினைந்து ஆண்டா, இஷ்டபாடமா, கட்டாய பாடமா, ஆசைகாட்டியா அச்சமூட்டியா, என்று முறைகள் பற்றி இவர்களுக்குள்ளே சச்சரவே தவிர, மூல நோக்கம் பற்றி அல்ல; அல்லவே அல்ல!

திராவிட இயக்கம் ஒன்றுதான் மூல நோக்கத்தை எதிர்ப்பது; திராவிடத் தனி அரசு, நமது கொள்கை; எனவே நமக்கு ஏக இந்தியா, அதற்கோர் தேசிய பாஷை என்ற பேச்சு, வடநாட்டு ஆதிக்கத்துக்கான வழி வகைதான் என்று எடுத்துரைத்துப் போரிடுகிறது.

இந்தி திணிப்பு என்பது திராவிடத் தனி அரசு எண்ணத்தை மண்ணாக்கி, வடநாட்டு ஆதிக்கத்தை நிலைநாட்டி ஆரியத்தைப் பீடத்தில் அமர்த்தும் சதித்திட்டம் என்று கூறும் நேர்மையும் நெஞ்சு உரமும், திராவிட இயக்கம் மட்டுமே கொள்ள முடியும்.

கட்டாயமில்லை — கார்த்திருக்கிறோம் — என்று சொல்லிவிட்டால் காங்கிரஸ்காரர்கள் திருப்தி அடைந்துவிடுவார்கள்.

தமிழ் மொழியைத் தலையில் வைத்துக் கொண்டாடுவோம் என்று பாகுமொழி பேசிவிட்டால்! தமிழ் மொழிப் புலவர்கள் பரம திருப்தி அடைந்துவிடுவார்கள்.

ஏன் இந்தி என்று அவர்கள் யாரும் கேட்கமாட்டார்கள் — இந்தியை எதிர்க்கமாட்டார்கள்.

இந்தி திணிப்பு என்பது வடநாட்டு ஆட்சிக்கான சதித்திட்டம் என்பதை உணர்ந்த திராவிட இய்க்கம் மட்டுமே, உண்மையான, உருப்படியான கிளர்ச்சியை நடத்த முடியும்—நடத்தி இருக்கிறது.

பெரியாரின் ஆகஸ்ட் கிளர்ச்சி பற்றிய அறிவிப்புகளைப் படிக்கும்போது, நமக்கெல்லாம் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டுப் பணியாற்றி சிறை சென்று செந்தமிழ் நாட்டுக்கு ஒப்பற்ற ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி மகிழ்ந்த அந்த நாட்கள் நினைவுத் திரையில் நின்று மகிழ்விளிக்கின்றன.

ஆகஸ்ட் கிளர்ச்சி பற்றிய திட்டம், அனேகமாக இந்த இதழ் வெளிவரும்போது, வெளியாகி இருக்கக்கூடும்.

அந்தத் திட்டத்தை அறியவும் ஆவன செய்யவும் ஆர்வம் கொண்டவர்கள் ஆயிரமாயிரம் உளர். எல்லோரும் ஒரே முகாமிலிருந்தா, அவரவர், அவரவர் அமைப்புக்குள் இருந்தா, என்பன போன்ற பிரச்சினைகள் ஒருபுறம் இருப்பினும், ஆகஸ்ட் கிளர்ச்சி பூத்திடுவது கண்டு மகிழாத உள்ளம் இல்லை, அது வெற்றி மணம் வீசுவதாக அமைய வேண்டும் என்று விரும்பாத திராவிடன் இல்லை.

## ஐந்தாண்டுத் திட்டம்!

*

## அரசியல்வாதிக்கு!!

முதலாண்டு:- காங்கிரஸ் சபைக் கூட்டத்துக்கு, எப்படியாவது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட வேண்டும்.

இரண்டாமாண்டு:- மாகாண காங்கிரஸ் கமிட்டியில் நுழைவது.

மூன்றுமாண்டு:- மத்திய சட்டசபைக்கு இல்லையானாலும், மாகாண சட்டசபைக்காவது தேர்ந்தெடுக்கப்படும் வழி செய்து கொள்வது.

நாலாமாண்டு:- குட்டி மந்திரியாகி விடும் வழியைப் பார்ப்பது.

ஐந்தாமாண்டு:- மந்திரியாகிவிடுவது!

—அப்பாஸ்.

# இரு வெற்றிகள்

ஆதிக்க புரியினரின் ஆர்ப்பாட்டம் நீடிக்க முடியாது என்பதை எடுத்துக்காட்டும் இரண்டு வெற்றிகள்—இரண்டு முனைகளிலிருந்து. ஒன்று மொழிப்போர்! இன்னொன்று உரிமைப்போர்!! ஈடுபட்டோர் இருவரும் இருவேறு முகாம்களைச் சேர்ந்தோர்களானாலும், அடைந்திருக்கும் வெற்றி, உரிமை இயக்கத்தினராகிய நமக்கு உற்சாக மூட்டுவதாகும். வேற்று மொழி வேண்டாம்! தாய்மொழியே வேண்டும்!—என்பது, ஒரு குரல். அடக்குமுறைக் கஞ்சோம்! உரிமைகளைப் பெறுவோம், — என்பது, இன்னொரு குரல். இரண்டு குரல்களும் எழும்பிய முனைகளை அறியும்போது, ஆச்சரியமாகக்கூட இருக்கும். மொழிப்போர் செய்தோர் முஸ்லீம்கள்! உரிமைப் போர் துவக்கியோர், சீக்கியர்கள்!

ஒன்று பாகிஸ்தானத்தில்; இன்னொன்று இந்துஸ்தானத்தில்.

இரு அறப்போர்களும், வெற்றி பெற்றிருக்கின்றன.

கிழக்குப் பாகிஸ்தானில் வாழும் மக்கள், பாகிஸ்தான் மத்யசர்க்கார் திணிக்கும் உர்தூ மொழியை எதிர்த்தனர். வங்காளம், எமது சொந்த மொழி! அதைவிட்டு, உர்தூ, ஏன்!—என்று கேட்டனர்; டாக்காவில், இக்கிளர்ச்சி, பெரியதோர் இயக்கமாயிற்று—மாணவர்களின் அமளியும், கிழ்பாகிஸ்தான் சர்க்கார் அதனை அடக்க வீசிய தடியடி கண்ணீர்ப் புகைகளையும் பலர் மறந்திருக்கமுடியாது. மத்திய சர்க்கார் சொல்லுகிறோம்! இதை மாகாண மக்களாகிய நீங்கள் மறுப்பதா? ஐக்கிய பாகிஸ்தான் ஏற்பட ஒரே மொழிதானே வேண்டும்! எதிர்க்கலாமா!—என்று அன்பு மொழி, மிரட்டல், அடக்குமுறை ஆகிய பலவற்றையும் வீசினர். அனால் இப்போது! தள்ளாடும் தம் நிலை சரியாகவேண்டுமாயின், மக்கள் மனப்படி நடத்தலே சரியெனத் தீர்மானித்து, உத்தரவு வாபஸ் வாங்கப் பட்டுவிட்டது. உர்தூ, அங்கே உலவாது கட்டாய மொழியாக!!

கடந்த 70 நாட்களாக, 8000க்கு மேற்பட்டோர், சிறைக்குச் சென்றபடி, தொடர்ந்து நடைபெற்று வந்ததே அகாலியர் கிளர்ச்சி, கிழக்குப் பஞ்சாபில், அதுவும் முடிவுபெற்றுவிட்டது. பஞ்சாபி சுபா! பஞ்சாப் மாகாணம் வேண்டும்!—என்கிற முழக்கங்களையே ஒலிக்கக்கூடாது என்று, டில்லியைத் திருப்தி செய்வதற்காக, கிழக்குப் பஞ்சாப் சர்க்கார், தடை உத்தரவு பிறப்பித்தது. இது, மக்கள் உரிமையைப் பறிப்பதாகச் சொல்லி, தாராசிங் தொடர்ந்தார், அறப்போர். தூ! தூ! இதுவும் ஒரு போரா? — புஸ் என்று போய்விடும்—நேரு கூட்டத்திலேயே புகுந்து கலாட்டா செய்த தாராசிங்குக்குமா ஜனங்கள் வருவார்கள்?—என்று, ஏளனமும் கேலியும் செய்தனர். ஆனல், அறப்போர் சிக்கியரது மதபீடமான பொற்கோயில்முன் தினசரி ஆரம்பமாகிக் கொண்டிருந்தது! 8000 பேர்! எளிது அல்ல, பஞ்சாபில். சிறைக்குள், புற்றீசல்போல! சச்சார் எனும் முதலமைச்சருக்கு 'ஆச்சாரியாருக்கு' ஏற்பட்ட நெருக்கடி ஏற்பட்டு, அரசே கவிழுமளவுக்கு வளர்ந்துவிட்டதாம் நிலைமை. அதனுல், சர்க்கார் தாங்கள் போட்ட, தடையுத்தரவை வாபஸ் பெற்றுவிட்டனர்! வெற்றிகரமான வாபஸ்!

இந்த அறப்போராட்ட வெற்றிகள், விடுதலை இயக்கங்கள் அடிக்கடி கூறுவதான 'நீதி வெல்லும்! ஆதிக்க நினைவு அழியும்!' எனும் உண்மைக்குச் சான்றுகளாகும்.

எங்கேயிருந்தாலும், மொழி பற்றிய உரிமையும்—குடி உரிமைகள் பற்றிய அடிப்படை முழக்கமும், எழும்பாமற் போகாது எனும் உண்மைக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

பாஞ்சாலமும் வங்கமும் பெற்ற வெற்றிகள் திராவிடத்திலே, ஜூலைகளும் ஆகஸ்ட்டுகளும் வெற்றிகரமாவதற்கான நம்பிக்கையைத் தருவதாக அமைந்துள்ளன. மகிழ்கிறோம். திராவிடமே! பாராய்! என்று கூறி அழைக்கிறோம். ★

### முக்கிய அறிவிப்பு

'திராவிடநாடு' இதழில் அண்ணாத்துரை தீட்டிய "அரசாண்ட ஆண்டி" முதலிய தொடர்கட்டுரைகளை, நூல்வடிவில் கொணர சிலர் முயற்சிப்பதாக அறிகிறோம். குறிப்பாக மதுரையில் இம்முயற்சி நடப்பதாகத் தெரிய வருகிறது. இந்தக் கட்டுரைகள் யாவும் சென்னை பாரிநிலையத்தாருக்கு ஏற்கனவே உரிமையளிக்கப்பட்டிருப்பவை. எனவே, அனுமதியின்றி வெளியிடுவோரும் — அச்சடித்துத் தருவோரும், சங்கடத்துக்கும் சட்டபூர்வமான நடவடிக்கைக்கும் ஆளாக நேரும் என்பதை எச்சரிக்கிறோம். நேரியபாதையில் நடப்பதே, எப்போதும் நல்லது.

# இது என்ன பிரமாதமா!

உத்தரப்பிரதேசத்தில், யானைகட்டி ஏர் உழுகிறார்களாம்! பண்டிதபந்த், இதை வெகுவாகப் பாராட்டி, டிராக்டர்களைவிட, யானைகளைக் கொண்டு வேலை வாங்குவது பல வகையில் அதிகப் பலன் அளிக்கும்; செலவும் குறையும் என்று கூறினாராம். இராஜ்யமிழந்த இராஜாக்களிடம் உள்ள யானைகள், வேலையின்றிக் கிடக்கின்றன, அவைகளைக்கொண்டு யானை கட்டி ஏர் உழும் திட்டத்தை விரிவுபடுத்தலாம் என்று பந்த் யோசனை கூறியிருக்கிறார்.

உத்தரப்பிரதேசமே! நீ யானை கட்டி ஏர் உழுவதுபற்றிப் பிரமாதமாகப் பேசாதே! இங்கே நாங்கள் மனிதனையே கட்டி ஏர் உழுதிருக்கிறோம். மழையின்றி, பூமி வெடித்து, உணவுப் பஞ்சம் படை எடுத்திருந்தசமயம்; எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில், மாடு கன்றுகள் மடிந்தன, மக்கள் எலும்புந் தோலுமாயினர்; புளியங்கொட்டையும் பருத்திக்கொட்டையும் சாப்பிடலாம், அவை சத்துள்ள ஆகாரம் என்று முன்னறி கூறினரே, அந்தக் காலம்; அப்போது, மனிதர்களையே கட்டி ஏர் உழுதனர் இங்கு!—என்று கூறி, நமது 'ராஜ்ய' காங்கிரஸ் மந்திரிகள் பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடும். இங்கு, அதுபோல நடந்தது. வேலையின்றி மக்கள் தவித்தனர்; பட்டினிச்சாவுகள்! அங்கத்தை வளர்க்க எந்த வேலையானாலும் செய்தாக வேண்டும் என்ற நிலைமை படமெடுத்தாடிற்று. மாடுகளுக்குப் பதிலாக மனிதர்களே, ஏரில் கட்டி ஒட்டப்பட்டனர்; உழவுக்காக! மாடுகட்டிக் களம் அடித்தால் ஆகாது என்று, யானை கட்டிப் போரடித்த தமிழ் நாடு என்று நாட்டுப்பாடல் இருக்கிறது; அந்தத் தமிழ் நாட்டில், மனிதரைக் கட்டி ஏர் உழுதார்கள், காங்கிரஸ் மகானுபாவர்களின் ஆட்சியில்!

★

### சந்தாதாரர்களுக்கு

முகவரியை மாற்றும்படியும், சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ள பணம் அனுப்பும் போதும் சந்தாதாரர்கள் தங்கள் சந்தா எண்ணை' அவசியம் குறித்து எழுதவும்.

—மானேஜர்.

# சர்வம் கமிட்டிமயம்!

எதற்கெடுத்தாலும் நிபுணர் கமிட்டி தான், மஞ்சளாட்சியில்! நிபுணர்களாயிருப்போரெல்லாம் எமக்கு வேண்டியவர் என்று காட்டிக்கொள்ளத்தானோ என்னவோ, கமிட்டிகளை நியமிப்பதில் வெகு தாராளம், டில்லி பீடம்!! மிஷினில் அரைக்கும் அரிசியைப்பற்றி ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டி தன் முடிவுகளை, சமர்ப்பித்திருக்கிறது. அதன்படி, கொஞ்சங்கொஞ்சமாக மிஷினில் நெல் அறைப்பதைக் குறைத்து, கைக்குத்தல் முறையை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமாம். ஏன் தெரியுமா, இந்த மாறுதல்? இப்படிச் செய்வதால், கிராமங்களிலிருக்கும் விவசாயிகளுக்கு, பயிர்த் தொழில் செய்த காலம்போக, வீணாகும் மாதங்களில் நாலைந்து மாதத்துக்கு அரிசி குத்தும் வேலை கிடைக்குமாம்! வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் விசித்திரக் கண்டுபிடிப்பு. இது!! மிஷின்களே இல்லாத கிராமங்கள், ஏராளம் உண்டு, நாட்டில். அங்குள்ள வீடுகளில், அப்போதைக் கப்போது, 'நடவாள்களை'க்கொண்டு அரிசி குத்திக் கொள்வார்களே யொழிய, சாகுபடியான பிறகு குத்திக் குதிரில்போட்டுக் கொள்வதில்லை! தொடர்ந்து இப்போதும், இதே பழக்கம்தான். அதைவிட விசித்திரம், கிராமப்புறங்களில் மிஷினை நோக்கி கொண்டுசெல்லுமளவுக்கு, மூட்டைகளை அடுக்கிவைத்திருப்போர் தொகை கூட மிகக் குறைவு. எனினும், வேலையில்லாக் கவலைப்போக்கும் திட்டமாம்இது. மிஷினில் அரைப்பதைவிட கைக்குத்தலரிசியில் சத்து அதிகம்—என்றும் சொல்லியிருக்கிறது, கமிட்டி. 'பழைய உண்மை இது! இதைக் கண்டுபிடிக்க கமிட்டி ஏன்?' என்று கேட்காமல்லவா! அவர்களுக்குப் பதில் கூற வேண்டுமே — அதற்காக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் குடிசைத் தொழில் என்று கூறியிருக்கின்றனர்! சர்வம் கமிட்டிமயம்! சர்வம் குழப்பமயம்!!

# 'தழை தான்'

சம்பத் தான் பூ தான், சிரம தான் என்று கூறுகிறார்கள்—ஆனால் முக்கியமான 'தானம்' ஒன்று நடைபெறுகிறது, அதை யாரும் பாராட்டிக் கூறமாட்டேனென்கிறார்கள். கவர்னர் முதற்கொண்டு காங்கிரஸ் தொண்டர் வரையில், இந்தத் தானத்தில் ஈடுபட்டுள்ளனர்—ஐந்து ஆண்டுகளாக. தழைதான்! என்று இதற்குத் திருப்பெயரிட்டுப் பாராட்டி இருக்கவேண்டும். இன்று கவர்னராக உள்ள முன்ஷி அவர்கள் தான் வனமகோத்சவம் என்ற பெயரிட்டு

இந்த 'தழைதான்' இயக்கத்தைத் துவக்கி வைத்தார்.

மரம் நடும் விழா என்று இதைத் தமிழாக்கினர்—இங்கு.

ஆண்டுக்குப் பத்துக்கோடி 'மரம்' நடுவது என்பது திட்டம்.

ஐந்தாமாண்டு இப்போது—மகோத்சவம் நடக்கிறது.

இது வெற்றிகரமாகி, கூறப்பட்ட பலன் கிடைத்திருக்குமானால் 'பாரதம்' ஒரே பூஞ்சோலை மயமாகி இருந்திருக்கும்-இருந்திருக்க வேண்டும். ஆனால் நிலைமை என்ன? ஆனந்தவிகடன் கூறுகிறது, கேளுங்கள்.

"இன்று நாட்டில் செடி கொடிகள் அதிகரித்திருப்பதற்கான ருசு ஒன்றும் தென்படவில்லை. கார்ப்பரேஷன் பார்க்குகளும்நகரசபை ரஸ்தாக்களும், திறந்த வெளிப்பார்க்குகளும் எல்லாம் இன்னும் பொட்டல் காடுகளாகவே காணப்படுகின்றன. சில இடங்களில் மட்டும் பொத்தல்'டிரம்'களும்வளைந்து நசுங்கிப்போன இரும்புக் கூண்டுகளும் அந்த இடங்களில் உத்சவம் பிரமாதமாக நடத்தப்பட்டதற்குச் சின்னங்களாகச் சிதறிக்கிடக்கின்றன அங்கே மேளதாளத்தோடு நடப்பட்ட செடிகளுக்கு ஞாபகச் சின்னங்கள் தான் அவை."

ஆனந்தவிகடன், இப்படிக் கண்டிப்பதும் கேலி செயவதும் முற்றிலும் தவறு. ஆமாம், வேண்டுமென்றே 'தழைதான்' இயக்கத்தைப் பழிக்கும் செயல்.

இவ்வளவு மகோத்சவம் நடத்தினார்களே தவிர, பூஞ்சோலையா பார்க்கிறோம், பொட்டல்தானே எங்கும் இருக்கிறது, என்று கேட்கிறது விகடன்.

பொறுப்பற்றவர்களா, இந்த வன மகோத்சவம் நடத்தி வருகிறார்கள்.

அவர்களுடைய அரிய சேவையால், இந்த ஐந்தாண்டுகளில் எவ்வளவு ஆடுகள் ஆசை தீரத் தழைகளைத் தின்று வாழ முடிந்தது—இதைப்பற்றிச் சிறிதளவும் அக்கரை காட்டவில்லையே, விகடன்!!

வனமகோத்சவம் என்று பெயரிட்டாலும், அதை நடத்தியவர்களுடைய நோக்கம் ஆடுகளுக்குத் 'தழைதான்' தரவேண்டும் என்பதுதான்!

அந்தத் 'தழைதான்' வினோபாவின் பூதானைவிட வேகமாக வெற்றிகரமாகி விட்டிருக்கிறது; அதனாலேதான் பொட்டல்கள் எங்குபார்த்தாலும்.

இந்த அருமையை ஆனந்தவிகடனே உணர்ந்து பாராட்டாமலிருப்பதற்குக் காரணம், பொருத்தமான பெயரிடாமலிருப்பதுதான் — ஆகவே அடுத்த ஆண்டிலிருந்து, வனமகோத்சவம் என்று பெயர் இருப்பதை மாற்றி 'தழை தான்' என்று நாமகரணமிடும்படி, பெரியவர்களைக் கேட்டுக்கொள்வோமாக!

# மாத்ருபூதம்

மாத்ருபூதம் அய்யர்! ஏற்றுக்கொண்டிருந்த பணி இந்திப் பிரசாரம்! அதுவும் தமிழ் நாடு இந்திப்பிரசார சபையின் அலுவலர்—அவருக்கு 9 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறார், திருச்சி நீதிபதி. சபையின் பணத்தில் ரூ. 243ஐ கையாடல் செய்தாராம்—பலன், 9 மாதம்! நீதிமன்றம் ஏறிய வழக்கு, இது. ஆனால் இந்திப் பிரச்சாரம் என்கிற பெயரில், எத்தனை 'மாத்ருபூதங்கள்' எங்கெங்குள்ளனரோ, யாருக்குத் தெரியும்! ஏதோ, அடிக்கிறது யோகம்!

★

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.